ජාතික සහජීවනය, සංවාද හා රාජ්‍ය භාෂා අමාත්‍යාංශය

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

MINISTRY OF NATIONAL CO-EXISTENCE, DIALOGUE AND OFFICIAL LANGUAGES

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# Annual Performance Report

# 2016

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2016

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

உள்ளடக்கம் பக்கம்


01. அறிமுகம் 01 - 04

02. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் அமைப்பு. 05 - 9

03. அமைச்சின் பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

03.1. தேசிய மொழிகள் பிரிவு 13 - 20

03.2. சமூக ஒருமைப்பாடு மற்றும் இன அலுவல்கள் பிரிவு 21 - 35

03.3. நிர்வாகப் பிரிவு 33

03.4. திட்டமிடல் பிரிவு 37

03.5. கணக்குப் பிரிவு 38

03.6. உள்ளக கணக்காய்வு பிரிவு 39

04. அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள் 41 - 48

05. அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள் 49 - 60

06. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள் 61 - 74

07. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் 75 - 77

08. அமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள்

08.1.சமூக ஒத்திசைவு மற்றும் நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்னெடுப்புகள் 81

08.2.சட்ட அமுலாக்கல் நீதிக்கான அணுகு வழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் 82 - 83

09. நாணய ஒதுக்கீடு 85 - 88

10. முன்பணக் கணக்கு 89 - 91

11. விமர்சனம் 93 - 95

# 01. அறிமுகம்

## அறிமுகம்

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சானது 1945/40 ஆம் இலக்க 2015.12.08 ஆம் திகதிய விஷேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சராக கௌரவ மனோ கணேசன் அவர்களும் செயலாளராக திரு.ரஞ்ஜத் உயங்கொட அவர்களும் கடமையாற்றுகின்றனர். இவ்வமைச்சு இல 40, புத்தகமுவ வீதி, இராஜகிரிய எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ளது.

**தொலைநோக்கு**

பல்வகையினால் பலம் பெற்றதும் சகவாழ்வு மீள் நிர்மாணிக்கப்பட்டதும் அனைத்து கலாச்சாரங்களினதும் தனித்துவங்களும் பேணி போற்றப்படுகின்றதுமான இலங்கை தேசம்.

**பணிநோக்கு**

அனைத்து மக்கள் குழுக்களினதும் உரிமைகள் உறுதிசெய்யப்படுகின்ற, ஒருவரை ஒருவர் பரஸ்பரம் மதிக்கின்றதும், சகவாழ்வுடனும் அபிவிருத்தியடைந்ததுமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான கொள்கைகளை உருவாக்குதல், கலந்துரையாடல்களை ஏற்படுத்தல், வழிகாட்டுதல், வசதியளித்தல் மற்றும் அதற்கு உரித்தான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும அமைச்சின் நோக்கம்**

- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கம் தொடர்பில் அரச நிறுவனங்களை வலுப்படுத்தல்.
- பொது மக்களுக்கான சேவைகளை இரு மொழியில் வழங்குவதற்காக மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.
- சமூகத்தில் தேசிய சகவாழ்வை மேம்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தேசிய சகவாழ்வை மேம்படுத்துவதற்கு தேவையான தலைமைத்துவம் மற்றும் வசதிகளை வழங்குதல்.
- தேசிய சகவாழ்வை மேம்படுத்தல் அத்துடன் அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்க அரச மற்றும் தனியார் துறை அமைப்புகளை ஒருங்கிணைத்தல்.

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயற்பாடுகளும் பணிகளும்

- தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய விடயப்பரப்பு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் விடயப்பரப்பிற்குரிய கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடல்.

- தேசிய மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் மற்றும் அது தொடர்பான செயற்பாடுகள்.

- இனங்களுக்கிடையில் ஒற்றுமை மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்துவதற்கு தேவையான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துதல்.

- தேசிய மொழிகள் மற்றும் இணைப்பு மொழியைப் பயன்படுத்தி இனங்களுக்கிடையே சமூக ரீதியாகவும், சமய ரீதியாகவும் சிறந்த சூழலையும், அன்னியோன்னிய புரிந்துணர்வையும் ஏற்படுத்துவதற்கு வசதியளித்தல்.

# 01. தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் அமைப்பு.

# அமைச்சின் பிரிவுகள்

**தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு**

தொ.பே 0112883926-28
தொலைநகல் 0112883929

மின்னஞ்சல்
admin@lanintegmin.gov.lk

**சப்ரகமுவ மாகாண நிலையம்**
இரத்தினப்புரி

தொ.பே 045-2232444

**வட மாகாண நிலையம்**
திருநகர்- கிளிநொச்சி

தொ.பே 021-2283660
தொலைநகல் 021 2283656

**கொள்கை அபிவிருத்தி பிரிவு**

தொ.பே 01122883713
தொலைநகல்
011 2883714
மின்னஞ்சல்-
policydevelopment@gmail.com

**சகவாழ்வு பிரிவு**

தொ.பே -011 2865942
தொலைநகல்
0112883785

**நிர்வாகப் பிரிவு**

தொ.பே-011 2883782
தொலைநகல்
0112883784
மின்னஞ்சல் -
sasad@lanintegmin.gov.lk

**திட்டமிடல் பிரிவு**

தொ.பே -011 2886796
தொலைநகல் -
011 2886797
மின்னஞ்சல் -
planningmnlsi@gmail.com

**கணக்குப் பிரிவு**

தொ.பே -0112883935
0112883938
மின்னஞ்சல் -
imprestnlsi@gmail.com

**உள்ளக கணக்காய்வு பிரிவு**

தொ.பே- 011 2501949

## தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்

**அரசகரும மொழிகள் திணைக்களம்**

தொ.பே -011 2888934

தொலைநகல்- 011 2888928

மின்னஞ்சல் - comol@sltnet.lk

**அரசகரும மொழிகள் ஆணைக்குழு**

தொ.பே -011 2670829

தொலைநகல்- 011 2670830

மின்னஞ்சல் -olc@sltnet.lk

**தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்**

தொ.பே -011 3092909

தொலைநகல் - 011 2665200

மின்னஞ்சல்-nilet@sltnet.lk

**அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்**

தொ.பே -011 2877376

தொலைநகல் -011 2884612


அமைச்சின் கீழ் உள்ள வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள்
சமூக ஒத்திசைவு மற்றும் நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்னேடுப்புக்கள் (FLICT)
சட்ட அமுலாக்கல் நீதிக்கான அணுகு வழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு வலுப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் (SELAJSI)

# 03. தேசிய சகவாழ்வு¸ கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் கீழ் உள்ள பிரிவுகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகைகள்

## 3.1 கொள்கை அபிவிருத்தி பிரிவு

**அறிமுகம்**

அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறனாக அமுல்படுத்தல் மற்றும் சகவாழ்வினை மேம்படுத்தல் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் அத்துடன் அனைத்து பிரஜைகளுக்கும் சமமான வாய்ப்பு உறுதிப்படுத்தப்படும் சூழலை எற்படுத்துதல் என்பதனை நோக்காக கொண்டே தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு தாபிக்கப்பட்டது.

மேற்குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக, அரசகரும மொழிகள் கொள்கையின் வினைத்திறனான அமுலாக்கம் மற்றும் சகவாழ்வினை தாபித்தல் என்ற இலக்கினை நோக்கிய கொள்கை திட்டங்கள் தயாரிப்பு, ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், சேவைகள் வழங்கள், வசதியளிப்பு மற்றும் பின்தொடர் செயற்பாடுகள் என்பவற்றினை கொள்கை அபிவிருத்தி பிரிவு மேற்கொண்டு வருகிறது.

**கொள்கை அபிவிருத்தி பிரிவின் நோக்கங்கள்**

- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்குவதற்கான திட்டமிடல் மற்றும் கொள்கையாக்கம்.
- அரச சேவையை இருமொழிமயமாக்குவதற்கு தேவையான சூழலை உருவாக்குதல்.
- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கம் தொடர்பாக பொது மக்களை வலுப்படுத்தல்.
- மொழிகளை பிரபல்யப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் மக்களிடத்தில் நேர்கணிய மனநிலையை ஏற்படுத்தல்

**கொள்கை அபிவிருத்திப் பிரிவின் பணிகள்**

அரச நிறுவனங்களின் மொழித் திட்டங்கள் தயாரிப்பு செயன்முறைக்கு வசதியளித்தல்.

- பொது நிறுவனங்களில் மொழித்திட்டங்களை தயாரிப்பதற்கான செயன்முறை வழிமுறைகளை மேம்படுத்தல்.
- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கம் தொடர்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- உள்ளூராட்சி பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்துடன் இணைந்து கலந்துரையாடல் செயலமர்வுகளை நடாத்தல்.
- சகவாழ்வு சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் சகவாழ்வு சங்கத்தினால் முன்வைக்கப்படும் கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல்.
- இரு மொழி வசதியளிப்ப கருமபீடங்களில் பெயர்ப்பலகை தாபிப்பதற்கான நிதி ஒதுக்கீடு.
- எப்போதும் எங்கேயும் அவசியமான படிவம் மற்றும் விண்ணப்பங்களை மொழிப்பெயர்த்தல்.

**தேசிய மொழிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

**01. சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் கொள்கை தொடர்பிலான நிறுவன வழிகாட்டல், வசதியளிப்பு மற்றும் மேற்பார்வை**

இலங்கையில் பேண்தகு சகவழ்வினை ஏற்படுத்துவதற்கு வினைத்திறனான மொழிக் கொள்கை அமுலாக்கமானது அத்தியாவசியமான தேவையாகும். அரசகரும மொழிகள் அமுலாக்கம் தொடர்பாக அர்த்தமுள்ள பொறுப்பு கையளிப்பினை பொது நிர்வாக சுற்றிக்கை இல. 18/2009 ஏற்பாடு செய்துள்ளதுடன், அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்தல் மொழித் திட்ட வசதியளிப்பு நிகழ்ச்சித்திட்டம் அல்லது மூலோபாய திட்டங்களை தயாரிப்பதற்கான செயன்முறை மேலும் வினைத்திறனாக்க எல்லா அரச நிறுவனங்களிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த முன்னெடுப்பின் கீழ் இப்பிரிவினால் அரச துறையின் பல்வேறு பரப்புகளில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே முன்வைக்கப்பட்டுள்ளன.

**1.1 அமைச்சுக்களின் செயலாளர்களுடன் நடாத்தப்பட்ட சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்சார் செயலமர்வு**



2016.07.11ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சகவாழ்வினை ஏற்படுத்தல் மற்றும் அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்தல் பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. புதிய அரசாங்கத்தின் கீழ் தாபிக்கப்பட்ட 54 அமைச்சுகள் ஒவ்வொன்றினதும் செயலாளர்கள் மற்றும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குகொண்டனர். நிகழ்ச்சித்திட்டத்தின் விரிவுரைகள் கலாநிதி பிரதீபா மஹனாமஹேவா உள்ளிட்ட நிபுணர் குழுவினால் வழங்கப்பட்டன. விரிவுரையின் முடிவில் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் பங்குபற்றியவர்களின் ஊக்கமிகு பங்கெடுப்பானது விரிவுரையின் வினைத்தினுக்கான குறிகாட்டியாக அமைந்திருந்தது.



**1.2 அமைச்சுக்களின் செயலாளர்களுடன் சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் கொள்கை தொடர்பாக நடாத்தப்பட்ட கலந்துரையாடல்சார் செயலமர்வு அத்துடன் பிரதேச செயலாளர்களின் விழிப்புணர்வை அதிகரித்தல்**

2016.03.18ஆம் திகதி SLIDA நிறுவனத்தில் மாவட்ட செயலாளர்களுக்கான காலாண்டு அமர்வு நிகழ்வு இடம்பெற்றதுடன், அந் நிகழ்வானது இவ் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது. இக் கூட்டத்தின் போது, அமைச்சின் செயலாளர் மொழித் திட்டம் தயாரிப்பு பணிகளின் தற்போதைய நிலையயை விளக்கியதுடன், பிரதான அரசகரும மொழிகள் அமுலாக்கல் உத்தியோகத்தர் என்ற வகையில் மாவட்ட செயலாளரின் வகிபங்கு பற்றி விளக்கினார். அத்தோடு, வழங்கப்பட்ட கால எல்லையினுள் மாவட்ட செயலகத்திற்கு கீழுள்ள பிரதேச செயலகங்களில் மொழித் திட்டங்களை தயாரிக்கும் செயன்முறையை பூர்த்தி செய்வதன் தேவை வலியுறுத்தப்பட்டது.

### 1.3மாகாண சபைகளின் நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான கலந்துரையாடல்சார் செயலமர்வு



இந்நிகழ்ச்சித்திட்டமானது, மேல் மாகாணத்தில் 2016.03.23ஆம் திகதியும், வட மத்திய மாகாணத்தில் 2016.07.28ஆம் திகதியும், கிழக்கு மாகாணத்தில் 2016.07.15ஆம் திகதியும், மத்திய மாகாணத்தில் 2016.10.31ஆம் திகதியும் நடாத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பிரதான அரசகரும மொழிகள் அமுலாக்கல் உத்தியோகத்தர், அரசகரும மொழிகள் அமுலாக்கல் உத்தியோகத்தர்கள், மற்றும் எனைய சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் விழிப்புணர்வு விருத்தி செய்யப்பட்டது. ஒவ்வொரு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமும் 100-150 உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டன. தள மட்டத்தில் சகவாழ்வினை ஏற்படுத்துவதனை நோக்காக கொண்டு இடம்பெற்ற இசை நிகழ்ச்சி அமர்வு இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய சட்டங்கள் தொடர்பிலான புலமைசார் கருத்துரையினூடாக, ஏற்புடைய நிறுவனங்களில் மொழித் திட்டங்கள் தயாரிப்புக்கு சாதகமான நிலைமை ஏற்படுத்தப்பட்டது.



### 1.4 தெரிவு செய்யப்பட்ட அமைச்சுக்களுக்கான மொழித் திட்ட செயற்பாட்டிற்கான வசதியளிப்பு



இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 5 அமைச்சுக்களுக்கான (நீதி அமைச்சு, பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு, சட்ட ஒழுங்கு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு) மொழித் திட்டங்கள் தயாரிப்பு தொடர்பிலான வசதியளிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில், தொடக்க நிகழ்ச்சித்திட்டமாக, ஆரம்ப செயலமர்வுகள் முறையே 2016.06.03ஆம் திகதி பொலிஸ் திணைக்களத்திற்கும், 2016.06.10ஆம் திகதி நீதி அமைச்சுக்கும், 2016.06.24ஆம் திகதி பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சுக்கும், அத்துடன் 2016.07.22ஆம் திகதி உள்நாட்டலுவலகள் அமைச்சுக்கும் இடம்பெற்றன. இந்த செயலமர்வுகளில், கலாநிதி பிரதீபா மஹனாமஹேவா அவர்களினால் அரசகரும மொழிகள் அமுலாக்கத்துடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் தொடர்பான கருத்துரை வழங்கப்பட்டது. அத்துடன் கருத்துரையினூடாக மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி) அவர்களினால் மொழித் திட்டத்தை தயாரிப்பதில் அரச நிறுவனங்களுக்குள்ள பொறுப்புகள் விளக்கப்படுத்தப்பட்டன.

## 1.5 மாவட்ட செயலகங்களில் மொழி வசதியளிப்பு செயன்முறை

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 24 மாவட்டங்களுக்கான மொழித் திட்ட தயாரிப்புக்கான வசதியளிப்பு தொடர்பான தொழில்நுட்ப பயிற்சி பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மொழித் திட்டத்தை தயாரிப்பதற்கான நான்கு படி முறைகளை பின்பற்றி நிறுவனத்திற்கான மொழித் திட்டத்தை தயாரிப்பதற்கான கோட்பாட்டு மற்றும் பிரயோக பயிற்சி வழங்கப்பட்டன. இச் செயலமர்விற்காக தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கான வளவாளர்களாக இந்த அமைச்சின் கீழ் பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் பங்களிப்பு வழங்கினர். ஏற்புடைய மாவட்டங்களுக்கு ஏற்புடைய விடயங்களை பயன்படுத்தி மாதிரி மொழி அறிக்கைகளை தயாரிப்பதற்கான பயிற்சியை அவர்கள் வழங்கினர். ஏற்புடைய பிரதேச செயலகங்களில் பணியாற்றும் தேசிய ஒருமைப்பாட்டு ஒங்கிணைப்பாளர்களும், பிரதேச செயலகங்களில் மொழித் திட்டத்தை தயாரிப்பதற்காக இந் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றினர்.



தற்போது, 10 மாவட்டச் செயலகங்களில் இருந்தும், 147 பிரதேச செயலகங்களில் இருந்தும் மொழித் திட்ட அறிக்கைகளின் வரைவுகளை அமைச்சு பெற்றுள்ளது. 2017ஆம் ஆண்டின் பின்னர், குறித்த அறிக்கைகளை பகுப்பாய்வு செய்து தயாரிக்கப்படவுள்ள இறுதி அறிக்கையை அடிப்படையாக கொண்டு மொழித் திட்டத்தின் கீழான செயற்பாடுகள் ஏற்புடைய அமைச்சுகளினால் மொழித் திட்டத்திட்டம் அமுல்படுத்தப்படும்.

## 1.6 புத்தாக்க மாதிரி நிலையங்களை வலுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம்

அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்கம் தொடர்பில் நான்கு விடயங்கள் கவனத்திற் கொள்ளப்படும்:

- அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்தலை வெளிப்படுத்தல்
- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கத்துடன் ஒட்டிய வகையில் பொருத்தமான நிருவாக பொறிமுறை மற்றும் ஆவண முறைமைய கைகொள்ளுதல்
- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கத்தினூடாக எதிர்பார்க்கப்படும் சேவைகளை வழங்குதல்
- அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கத்தினை நோக்கிய நிறுவன ரீதியான அர்ப்பணிப்பு



மேற்குறிப்பிட்ட விடயங்களுக்கு உட்பட்ட வகையில், அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவது தொடர்பில் 14 அரச நிறுவனங்களை புத்தாக்க மாதிரி நிலையங்களை அபிவிருத்தி செய்யும் பணியை கனேடிய அரசாங்கத்தின் உதவியுடன் அமைச்சின் கீழ் இயங்கும் மொழிகள் கருத்திட்டமானது அமைச்சுக்கு வழங்கியது. இந்த 14 நிறுவனங்களின் தெரிவானது நாட்டின் வேறுபட்ட துறைகளைக் கொண்டு அமைச்சு மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில், மேற்குறிப்பிட்ட வகைமாதிரிகளை அடிப்படையில் 14 அரச நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன. அவை தேசிய மொழிக் கருத்திட்டத்தின் கீழ் ஆசிய மன்றத்தினால் புத்தாக்க மாதிரி

நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்த நிலையங்களானது 07 உள்ளூராட்சி நிறுவனங்களையும், 01 பிரதேச செயலகத்தையும், 03 பொலிஸ் நிலையங்களையும் அத்துடன் 03 வைத்தியசாலைகளையும் உள்ளடக்கியுள்ளன.




அரச நிறுவனங்களை வலுப்படுத்துதலை அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவதற்காக புத்தாக்க மாதிரி நிலையங்கள் ஏற்படுத்தல் என அடையாளம் கண்ட இந்த அமைச்சானது 2015ஆம் ஆண்டில் அதனை ஆரம்பித்ததுடன், அச் செயற்பாடு 2016ஆம் ஆண்டும் முன்னெடுக்கப்பட்டது. இந்த முன்னெடுப்பின் முக்கிய நோக்கம் இவ்வாறான விடயங்களில் பணியாற்றும் ஏனைய அரச நிறுவனங்களுக்கு இந்த நிறுவனங்களை முன்மாதிரியாக பேணி முன்னுதாரணங்களாக நிலைநிறுத்துவதற்காகவாகும். இம் முன்னெடுப்பின் கீழ், மேற்குறித்த நிறுவனங்களில் அரசகரும மொழிகள் கொள்கையை அமுலாக்குவதில் உள்ள பலவீனங்கள் தொடர்பில் சோதனை பட்டியலை மீளாய்வு செய்தன் மூலம் அடையாளம் காணப்பட்டன.

இந்த செயற்பாட்டின் கீழ் பண்டாரவளை பிரதேச செயலகம், காலி மஹமோதர போதனா வைத்தியசாலை, மற்றும் திருகோணமலை பொது வைத்தியசாலை ஆகியவற்றினால் வழங்கப்பட்ட கட்டுமானத்திற்கான கருத்திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. விசேட கருத்திட்டமொன்று என்றவகையில் மஹரகம அபேக்சா வைத்தியசாலையின் அரசகரும மொழிக் கொள்கை அமுலாக்கத்தினை வெளிப்படுத்துவதனை மேம்படுத்த நிதி ஒதுக்கிடப்பட்டன.

## 2. உள்ளூராட்சி நிறுவனங்களில் அரச உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல்சார் செயலமர்வை நடாத்தல்

இந்த செயற்பாட்டின் கீழ், 2016ஆம் ஆண்டு திட்டமிடப்பட்டிருந்த 4 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அந்த வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் முறையே 2016.08.11ஆம் திகதி மேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் நிறுவன தலைவர்களுக்கும், 2016.09.27ஆம் திகதி சபரகமுவ மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் நிறுவன தலைவர்களுக்கும், 2016.10.06ஆம் திகதி வட மேல் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் நிறுவன தலைவர்களுக்கும், அத்துடன் 2016.10.13ஆம் திகதி தென் மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் நிறுவன தலைவர்களுக்கும் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டத்தினூடாகவும் நிறுவன மொழித்திட்டத்தை தயாரித்தல் மற்றும் அதனை அமுல்படுத்தல் ஊடாக குறித்த பிரதேசங்களில் அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான களம் ஏற்படுத்தப்பட்டது.

## 3. அரச நிறுவனங்களில் அறிவிப்பு பலகைகள் மும்மொழிகளில் அமைப்பதற்கு ஒதுக்கீடுகளை வழங்குதல்

அரசகரும மொழிகள் கொள்கையின் வினைத்திறனான அமுலாக்கத்தை மதிப்படுவதற்கான 04 வகைமாதிரிகளில் அரகரும மொழிகள் கொள்கை அமுலாக்கப்படுதலை வெளிப்படுத்தல் முக்கிய அம்சமாகும். எனவே, மக்கள் தாம் எதிர்பார்க்கும் சேவையை தாமதமின்றி அணுகுவதற்கு வழிகாட்டும் அறிவிப்பு பலகைகள், வழிகாட்டல் குறியீடுகள் மற்றும் ஏனைய அறிவிப்புகள் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்தபடுதல் அத்தியாவசியமானதாகும். இந்த முன்னெடுப்பின் முக்கியத்துவத்தை கருத்திற் கொண்டு தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்களில் மும்மொழிகள் அறிவிப்பு பலகைகளை பொருத்துவதற்காக கொள்கை

அபிவிருத்திப் பிரிவு ஒக்கீடுகளை வழங்கி இருக்கின்றது. இந் நிகழ்கச்சித்திட்டத்தின் கீழ் 2016ஆம் ஆண்டில் மும் மொழி அறிவிப்பு பலகைகளை பொருத்துவதற்காக 45 பிரதேச செயலகங்களுக்கும், 08 பொலிஸ் நிலையங்களுக்கும், களுபோவில போதனா வைத்தியசாலை மற்றும் கொழும்பு பொது வைத்தியாலை என்பவற்றுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

**04. அரசகரும மொழிகள் கொள்கை மற்றும் சகவாழ்வு தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல்சார் செயலாமர்வுகளை நடாத்தல்**

அரசகரும மொழிகள் கொள்கையின் வினைத்திறனான அமுலாக்கம் மற்றும் சகவாழ்வை தாபிப்பதற்கான கொள்கை முன்னெடுப்புகைளை ஏற்படுத்தல் என்பவை தொடர்பாக மிகவும் முக்கியத்துவமிக்க பங்களிப்பை வழங்ககூடிய இயலளவை பல்கலைக்கழக சமூகம் கொண்டுள்ளது. இதனை கருத்திற் கொண்டு, கிராம மட்டத்தில் சகவாழ்வுச் செய்தியை எடுத்துச் செல்லக்கூடிய சாதனம் என்ற வகையில் பல்கலைக்கழக மாணவ சமூகத்தை பயன்படுத்துவதன் சாத்தியத்தன்மையை ஆராய்வதற்கும், 2016.10.14ஆம் திகதி கொழும்பு 07இல் அமைந்துள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் கலந்துரையாடல்சார் செயலமர்வொன்று வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. 10 பல்கலைக்கழகங்களை பிரதிநிதித்துவப்படுத்தி விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் இந்த அமர்வில் கலந்து கொண்டிருந்தனர். கலாநிதி ஜயந்த செனவிரத்ன புலமைசார் கருத்துரையை வழங்கினார். தகவல்கள் குழு செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பணங்கள் ஊடாக திரட்டப்பட்டதுடன், அதனை தொடர்ந்து வந்த கருத்துரைகள் எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மிகவும் பெருமதிமிக்கதாக இருந்தன.

**05. மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் இரு மொழி வசதியளிப்ப கருமபீடங்களை தாபித்தல்**

மக்கள் தங்கள் விரும்பும் மொழியில் சேவைகளை திருப்திகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு வசதியளிப்பதனை நோக்காக கொண்டு 2012ஆம் ஆண்டில் இருந்து இரு மொழி வசதியளிப்பு கரும பீடங்கள் தாபித்தல் இடம்பெற்று வருகிறன. இந்த அமைச்சானது இதுவரையில் 72 இரு மொழி பிரதேச செயலகங்களில் 72 இரு மொழி கரும பீடங்களை அமைத்துள்ளது. மிகவும் வினைத்திறனான சேவையை மக்களுக்கு வழங்குவதற்காக இந்த அமைச்சின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் இந்த பிரதேச செயலகங்களுக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர். 2013ஆம் ஆண்டு முன்னோக்கிய நகர்வாக 19 பிரதேச செயலகங்களில் இரு மொழி சேவை கரும பீடங்கள் தாபிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது அவை நிறைவடைந்துள்ளன. 2014ஆம் ஆண்டு 06 பிரதேச செயலகங்களிலும், 08 மாவட்டச் செயலகங்களிலும் இரு மொழி சேவை கருமபீடங்கள் தாபிக்கப்பட்டன. அத்துடன் 2015ஆம் ஆண்டு 03 மாவட்டச் செயலகங்களிலும், 05 பிரதேச செயலகங்களிலும் கரும பீடங்கள் தாபிக்கப்பட்டன. 2016ஆம் ஆண்டில் மேலும் 04 பிரதேச செயலகங்களில் கரும பீடங்களை அமைப்பதற்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**5.1 சகவாழ்வு சங்கங்களை பதிவு செய்தல் மற்றும் மறுமலர்ச்சி நிகழ்ச்சித்திட்டம்**

பன்மைத்தன்மை மற்றும் சகவாழ்வுடன் வாழுதல், அனைத்து சமூகங்களினதும் கலாசாரத்தை பேணி வளர்த்தல் என்பதனைக் கொண்ட இலங்கை தேசத்தினை கட்டியெழுப்புதல் என்ற அமைச்சின் தொலை நோக்கிற்கு அமைய சகவாழ்வை தாபிப்பதற்கு அரசகரும மொழிகள் கொள்கை அமுலாக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பாக பொது மக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முன்னெடுப்பு என்ற வகையில் சகவாழ்வுச் சங்க நிகழ்ச்சித்திட்டத்தை அடையாளம் காண முடியும். இந்த நிகழ்ச்சித்திட்டம் 2012ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது

தீவளாவிய ரீதியில் 3,183 சகவாழ்வு சங்கங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. அவற்றில் 385 சங்கங்கள் 2016ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டன.

### 5.2 அரசகரும மொழிகள் மற்றும் சமூக சகவாழ்வு மேம்பாட்டுடன் தொடர்புடையதாக சகவாழ்வு சங்கத்தினால் முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களுக்கு நிதியளித்தல்

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் உள்ள மக்களிடத்தில் தேசிய சௌஜன்யம் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்பும் இலக்குடன் பல்வேறு கருத்திட்டங்களை அமுல்படுத்தல் சகவாழ்வுச் சங்கத்தின் மற்றுமொரு பணியாகும். 2016ஆம் ஆண்டில் நாடுபூராகவும் தாபிக்கப்பட்டுள்ள சகவாழ்வு சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 66 ஆக்கபூர்வமான கருத்திட்ட முன்மொழிவுகளுக்கு இப் பிரிவானது நிதியளித்துள்ளது. 2016ஆம் ஆண்டு இப் பிரிவினால் வழங்கப்பட்ட அவ்வாறான கருத்திட்டங்களாவன: குறைவான வசதிகளைக் கொண்ட நூலகங்களுக்கு நூல்களை வழங்குதல், மாணவ சமூகத்தை இரு மொழி திறனுடனானவர்களாக்குவதற்கும் இலக்குடன் கருத்தரங்கு தொடர்களை நடாத்தல், குறைவான வருமானம் கொண்ட குடும்பங்களில் உள்ள பிள்ளைகளை வலுப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டங்கள், உண்மையின் உதயம் என்ற தொனிப் பொருளிலான சித்திரப் போட்டி, சமுதாய தேவைகளை நிறைவு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள், சகவாழ்வை மேம்படுத்தும் பாடசாலைகளுக்கிடையிலான விவாதப் போட்டி, பன்மை இன மாகாணங்களுக்கு சுய தொழில் மேம்பாட்டிற்கு நிதியளித்தல் மற்றும் இன்னபிறவும். ஏற்புடைய பிரதேச செயலகங்களின் மேற்பார்வையின் கீழ் இக் கருத்திட்டங்களுக்காக ரூபா. 3.9 மில்லியன் வழங்கப்பட்டுள்ளன.

### 5.3 இந்த அமைச்சின் பணிப்பாணையின் கீழ் வரக்கூடிய ஏனைய விசேட கருத்திட்டங்கள்

பல்வேறு பிரதேசங்களில் இந்த அமைச்சானால் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட ஆக்கபூர்வமான கருத்திட்டங்களுக்கு நிதியளிக்கும் செயற்பாட்டை இப் பிரிவு முன்னெடுத்தது. மேற்குறித்த முன்னெடுப்பின் கீழ் காலி எலோசியஸ் கல்லூரியினால் வெளியிடப்பட்ட மும்மொழி சஞ்சிகை வெளியிடும் நிகழ்வு, அத்துடன் மும்மொழி மேம்பாடு மற்றும் குறித்துரைக்கப்பட்ட பாடங்களை கற்பதற்கு உதவுதல் என்பவற்றுக்கு நிதியளிக்கப்பட்டன.

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**கொள்கை அபிவிருத்தி பிரிவுக்கான நிதி முன்னேற்றம்**




| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| 01 | சகவாழ்வு மற்றும் அரசகரும மொழிகள் கொள்கை தொடர்பிலான நிறுவன வழிகாட்டல், வசதியளிப்பு மற்றும் மேற்பார்வை | 5,200,000 | 5,350,000 | 102.88% |
| 02 | அரசகரும மொழிகள் கொள்கைக்கான கலந்துரையாடல்சார் விழிப்புணர்வு செயலமர்வை நடாத்தல் | 1,250,000 | 940,000 | 75.2% |
| 03 | அரச நிறுவனங்களில் அறிவிப்பு பலகைகள் மும்மொழிகளில் அமைத்தல் | 3,550,000 | 3,370,000 | 94.93% |
| 04 | சகவாழ்வு சங்கங்களை தாபித்தல் பதிவு செய்தல் மற்றும் கருத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை வழங்குதல் | 4,000,000 | 4,560,000 | 114% |
| | **மொத்தம்** | **14,000,000** | **14,220,000** | 101.57% |

## 3.2 சகவாழ்வு பிரிவு

### அறிமுகம்

எமது நாட்டில் பல மதத்தை சேர்ந்த, பல இனத்தை சார்ந்த பிரஜைகள் வாழுகின்றார்கள். அவ்வாறான சமூகத்தில் பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி அனைவருக்கும் சகவாழ்வுடன் வாழக்கூடிய சமாதானம் மிக்க சூழலை ஏற்படுத்தல் நாட்டின் பேண்தகு அபிவிருத்திக்கு பக்கபலமாக அமையும். அதற்காக இலங்கையில் வாழும் அனைத்து இனங்கள் மற்றும் இனக் குழுக்களின் மரபுகளை பாதுகாத்தல், அனைவரினதும் தனித்துவ அடையாளங்களை பேணி, பரஸ்பர கௌரமளித்து நம்பிக்கையை வளர்க்கும் சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக இனங்களிக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு தேவையான நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் கண்டு அமுல்படுத்தல், இனங்களுக்கடையில் கலாசார, சமூக மற்றும சமய பின்னணிகளை பரஸ்பரம் அறிந்து கொள்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தலும் இடம்பெறுகிறது. அத்தோடு அவர்களிடையில் ஏற்படும் மோதல்கள் மற்றும் பிரச்சினைகளை கலந்துரையாடல் மூலம் தீர்வுகளை தேடுவதற்கு வசதியளிக்கப்படுகிறது.

### சகவாழ்வு பிரிவின் பணிகள்

- வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைய தேசிய சகவாழ்வு மேம்பாட்டுடன் தொடர்புடைய செயற்பாடுகளை அமுல்படுத்தல்.
- இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வினை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கான வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஊடாக சகவாழ்வை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- தேசிய சகவாழ்வு மேம்பாட்டு உதவியாளர்கள் ஊடாக குறித்த மாவட்ட மற்றும் பிரதேச செயலயகப் பிரிவுகளில் காணப்படும் சகவாழ்வுடன் தொடர்புடைய பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளல்.
- சகவாழ்வு மேம்பாட்டிற்கு ஏற்புடைய தரப்புகள் ஊடாக பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- பல்வேறு இனக் குழுக்களின் தனித்துவங்களும் மரவுகளும் மற்றும் கலாசாரங்களையும் பாதுகாத்து நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- தேசிய சகவாழ்வு மேம்பாட்டு உதவியாளர் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கணைப்பாளர் உத்தியோகத்தர்களுக்கு சகவாழ்வு தொடர்பில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதல்.

**சட்ட ஆவணங்களை வழங்கும் நடமாடும் சேவை**

இன பேதம் இன்றி அனைத்து இலங்கையரிடத்திலும் அந்நியோன்ய நம்பிக்கையை மேம்படுத்தி சமூகத்தில் உள்ள பாதிக்கப்படும் குழுக்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் பிரஜை என்ற வகையில் சமூகத்தில் வாழுவதற்கு தேவையான அடிப்படை சட்ட ஆவணங்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அரச நிறுவனங்களில் பெறத்தக்க சேவைகளை ஒரே இடத்தில் வழங்குதல் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

இதற்காக பதிவாளர் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, அரசகரும மொழிகள் ஆணைக்குழு, ஓய்வூதியத் திணைக்களம், இலங்கை பொலிஸ், பிரதேச செயலகங்கள், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, மத்திய வங்கி, சட்ட உதவி ஆணைக்குழு, இலங்கை சமூக பாதுகாப்பு சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபை மற்றும் சமாதான நீதவான்கள் என்ற அரச நிறுவனங்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

ஒரே இடத்தில் அனைத்து சேவைகளையும் மக்கள் தடைகள் இன்றி பெற்றுக் கொள்ளுவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படுவதுடன், இந்த சேவைகள் அனைத்தும் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக தேசிய அடையாள அட்டைக்கு தேவையான புகைப்படம் மற்றும் முத்திரை என்பனவும், பிறப்புச் சான்றிதழ், திருமண மற்றும் மரண சான்றிதழுக்காக பெற்றுக் கொள்ளப்படும் கட்டனம் மற்றும் புதிய திருமணத்திற்கு தேவையான கட்டணம் என்பன குறித்த நபர்களிடம் இருந்து அறிவிடப்படாமல் செய்து கொடுக்கப்படுகிறது.

இதனூடாக மக்களுக்கு நேரம் மற்றும் சக்தி விரயத்தை குறைத்துக் கொள்ள முடிவதுடன் பிரஜை என்ற வகையில் அவர்களின் அடையாளத்தை உறுதி செய்வதற்கான அடிப்படை ஆவணமான தேசிய அடையாள அட்டையை பெறுவதன் மூலம் அவர்கள் சமூகமயமாக முடிகிறது.

2016 ஆம் ஆண்டில் 5 மாவட்டங்களில் பிரதேச செயலகங்கள் 8 உள்ளடங்கும் வகையில் சட்ட ஆவணங்கள் மற்றும் சேவைகள் வழங்கும் நடமாடும் சேவை நடாத்தப்பட்டன. கங்க இஹல கோரலே, கதிர்காமம், மாலிம்பட, வலபனே, கொழும்பு, திம்பிரிகாஸ்யாய, கொலன்னாவ மற்றும் இரத்மலான என்பன இதில் உள்ளடங்கும். மேலும் ஓரங்கட்டப்பட்டுள்ள மக்கள் வாழும் பிரதேச செயலகப் பிரிவுகளாக உள்ளமை சிறப்பம்சம் என்பதுடன் இந்த பிரதேச செலயக பிரிவுகளில் உள்ள கிராம சேவகர் பிரிவுகள் கீழ்வருமாறு:

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கிராம சேவகர் பிரிவு |
|---|---|---|
| கண்டி | கங்க இஹல கோரலே | - |
| மொணராகல | கதிர்காமம் | கதிர்காமம் |
| | | தெடகமுவ |
| | | கரவிலே |
| | | செல்ல கதிர்காமம் |
| | | கந்தசுரிந்துகம |
| மாத்தறை | மாலிம்பட | - |
| நுவரெலியா | வலபனே | ஹரஸ்பெத்த வடக்கு |
| | | ஹரஸ்பெத்த தெற்கு |
| | | மொரபெத்த |
| | | மஹ ஊவ |
| | | கந்தேகம |
| | | புஸ்ஸெல்ல |
| | | புஸ்ஸெல்ல தெற்கு |
| | | சென்மாக்ரட் |
| கொழும்பு | கொழும்பு | புதுக்கடை கிழக்கு/ மேற்கு |
| | | ஜின்து பிட்டிய |
| | | வாழைத்தோட்டம் |

| | | |
|---|---|---|
| | | கொச்சிக்கடே வடக்கு/ தென் |
| | | சமிட்புர |
| | | மஹவத்த |
| | | மோதர |
| | | மாதம்பிட்டிய |
| | திம்பிரிகஸ்யாய | கிருல |
| | | கிருலபன |
| | இரத்மலான | கட்டுகுருந்து வத்த |
| | | வட்டரப்பல |
| | | கல்கிஸ்ஸ |
| | | கவுடான வடக்கு |

இதன்போது 5350 பேருக்கு பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டன. இதன் போது வழங்கப்பட்ட சேவைகள் பின்வருமாறு:

- தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பிறப்புச் சான்றிதழ் வழங்குதல், தாமதமான பிறப்பு பதிவு, திருத்தப்பட்ட அண்ணளவான வயது சான்றிதழை வழங்குதல் மற்றும் பிறப்பு, மரண, திருமண சான்றிதழ்களை வழங்குதல்.

புதிய திருமணங்களை மேற்கொள்ளல்

- திருமணம் செய்யாது சேர்ந்து வாழும் நபர்களுக்காக இலவசமாக திருமண பதிவு இடம்பெற்றது.
- காணாமல் போன தேசிய அடையாள அட்டைக்கு பொலிஸ் சான்றிதழ் வழங்குதல், காணால் போன அடையாள அட்டைக்காக பொலிஸ் அறிக்கை வழங்குதல்.
- கடவுச் சீட்டு வழங்குதல்
- சமாதான நீதவான் சான்றிதழ்கள் வழங்குதல்.

இதனூடாக தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்பு, இறப்பு மற்றும் திருமண சான்றிதழ்களுடன் தொடர்புடைய சத்தியப்பிரமாணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதியவர் அடையாள அட்டையை வழங்குதல்

சிரேஷ்ட பிரஜைகளுக்காக புகைப்படங்களை இலவசமாக வழங்கி முதியவர் அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனக்கு தேவையான மொழிகளில் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பிறப்பு/இறப்பு/திருமண உட்பட சட்ட ஆவணங்களை மொழிபெயர்த்தல்

- ஊழியர் சேமலாப நிதி சார்ந்த பிரச்சினைகளை முன்வைத்தல்
- நீர் வழங்கல் பிரச்சினைகளை தீர்த்தல்
- சட்ட உதவிகளை வழங்குதல்
- மின்சாரம் தொடர்பான பிரச்சினைகள்
- மோட்டார் வாகன திணைக்களம் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்தல்
- நகர சபை மதிப்பீடு பிரிவிற்கான சேவை வழங்குதல்





**ஓரங்கட்டப்பட்டுள்ள (பாடசாலை மாணவர்கள்) குழுக்களை வலுப்படுத்துவதனூடாக சகவாழ்வை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்**

சகவாழ்வுடன்கூடிய சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்காக நாட்டு மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அந்த அடிப்படை தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் போதல் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த சமூக தாக்கமனாது நாட்டின் பேண்தகு அபிவிருத்திக்கு தடையாக அமையும். பௌதீக மற்றும் மனித வளப் பகிரிவில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பொருளாதார கஸ்டங்கள் அடிப்படையில் நாட்டு மக்கள் சமூக ஓரங்கட்டலுக்கு உட்பட்டுள்ளனர். கல்வி, தொழில், சமூக பின்னணி, பால்நிலை, பொருளாதார நிலைமை ஆகிய பல்வேறு காரணிகள் காரணமாக நாட்டு மக்கள் ஓரங்கட்டலுக்கு உட்பட முடியும்.

அந்த வகையில் கல்வி உரிமையை வழங்குவதற்கு பொருளாதார, சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் இனம் அல்லது மதம் அல்லது கல்வி நிலை அடிப்படையில் எந்தவொரு அநீதியோ அல்லது ஓரங்கட்டலோ இடம்பெறுவதை தடுக்க நாம் அவதானம் செலுத்துகின்றோம். அந்த வகையில் ஓரங்கட்டப்படலுக்கு உட்பட்டுள்ள குழுக்களின் கல்விக்கான அணுகுதலுக்கு வசதிகளை செய்வதற்காக பெற்றோரை இழந்த அல்லது ஒரு பாதுகாவலரை மட்டும் கொண்ட அல்லது நகரத்தில் உள்ள ஏழை பிள்ளைகளுக்கு பாடசாலை பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் எமது அமைச்சினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

2016ஆம் ஆண்டில் கிளிநொச்சி, புத்தளம் மற்றும் கொழும்பு மாவட்டங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதன் போது 895 பாடசாலை மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனூடாக குறைந்த வாய்ப்புகளை பெறும் பிள்ளைகளுக்கு கல்வியை பெறுவதற்கு வசதியை வழங்கி, அவர்களை கல்வி பெறுவதற்கு வழிப்படுத்தல், சமூகத்தில் பாதிப்பிற்கு உட்படக்கூடிய குழுக்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பான்மையை மேம்படுத்துவதனூடாக அவர்களை சமூகமயமாக்கல் உறுதி செய்யப்படுகிறது.

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற வெள்ளப்பெருக்கு காரணமாக கொழும்பு மாவட்டத்தில் அதிகமானவர்கள் பாதிப்படைந்ததுடன், அந்த சந்தர்ப்பத்தில் எமது அமைச்சினால் கொலன்னாவ பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கத்தில் பாதிக்கப்பட்ட பல்வேறு இன மக்களுக்கு ஆவணங்கள் மற்றும் உணவு மற்றும் அத்தியாவசிய மருந்து வகைகள் அடங்கிய 500 பொதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டு முதியோர் தினத்திற்கு சமாந்திரமாக கொழும்பு பிரதேச செயலகத்தின் ஊடாக முதியோர்களுக்காக நிகழ்ச்சியொன்று ஒழுங்கப்படுத்தப்பட்டது. இதில் பங்குபற்றியவர்களுக்கு பொருள்சார் உதவுகள் வழங்கப்பட்டன.











**மக்கள் பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் - 2016**

எமது நாட்டில் உள்ள பல்வேறு இன குழுக்கள், சாதி, வர்க்கம், மதம், நம்பிக்கை, கலாசார பின்னணி, மொழி, பால்நிலை என்பவற்றுக்கு அமைய வேறுபடும் இனக் குழுக்கள் சமூகத்தினுள் வாழுகின்றன. இந்த அனைத்து இனக் குழுக்களும் மற்றும் இனமும் ஒன்றிணைந்து அவர்களின் உழைப்பை பெற்று நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. இந் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக சமூக நல்வாழ்வு, கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியன நாடுபூராகவும் இடம்பெற்றன. இதன் பிரதிபலனை சமூகத்தில் வாழும் அனைவருக்கும் வழங்கும் நோக்குடன் 2016 வருடத்தில் சமூகமட்டத்தில் மக்கள் பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. அந்த வகையில் 2016ஆம் ஆண்டில் பாதுகாப்புடன் கூடிய சமூகமொன்றினை ஏற்படுத்தல் ஊடாக அனைத்து இனக் குழுக்களிடையே சகவாழ்வை ஏற்படுத்துதல் நோக்குடன் இந்த நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது.

சமுதாயத்தின் உழைப்பு பங்களிப்பை பெற்று முன்பள்ளி, சிறுவர் பூங்க, சுகாதார சேவை, முதியோர் இல்லம், பகல்நேர சிறுவர் பாராமரிப்பு நிலையம், சனசமூக நல மறுசீரமைப்பு, குடி நீர் வழங்குதல், பாடசாலை கட்டிடங்களை புனர்நிர்மானம் செய்தல், பொது விளையாட்டு மைதானங்களை நவீனமயப்படுத்தல் ஆகிய அத்தியாவசியமான நிகழ்ச்சித்திட்டங்களில் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் என 49 நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக 30,000க்கும் அதிகமான மக்கள் நன்மையடைந்தனர். பாடசாலை மாணவர்கள், வயோதிபர் உட்பட வலது குறைந்த மக்களுக்கு அதிக நன்மைகள் கிடைத்தமை இதன் சிறப்பம்சமாகும். இதன் போது மக்களின் அறிவு, மனப்பான்மை, திறன் அபிவிருத்தி உட்பட சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.



### சகவாழ்வு மேம்பாட்டிற்காக ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு

சமூகத்தின் நல்லிருப்பிற்கு வெகுஜன ஊடகத்தின் பங்கு அத்தியாவசியமானதும் என்பதுடன் விசேடமானதும் என்பதனால், ஊடகவிலாளர்களின் பொறுப்பு மற்றும் அது தொடர்பாக அவர்களுக்கு விழிப்பூட்டும் நோக்கில் "சகவாழ்வு மேம்பட்டிற்காக ஊடகவியலாளர்களுக்கான பயிற்சி செயலமர்வு" என்ற இந்நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது.

பிரஜைகளின் மொழி உரிமையை உறுதிப்படுத்துவதில் ஊடகவியலாளர்களின் பொறுப்பு மற்றும் பணி, அத்துடன் தேசிய சகவாழ்வுக்கான ஊடகவியலாளர்களின் பணிகள் மற்றும் பொறுப்புகள், தேடல்சார் அறிக்கையிடலில் ஊடகவியாலளர்களின் வகிபங்கு, "மோதல் உணர்நிலை அறிக்கையிடல் என்றால் என்ன?" நடைமுறை நிகழ்வுகள் ஊடாக தெளிவுப்படுத்தல் என்ற தலைப்பினூடாக விடயம் தொடர்பில் நிபுணத்துவம் கொண்ட வளவாளர்களினால் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

இவ்வாறான செயலமர்வுகள் தொடர்ந்து நடாத்தல் காலப் பொருத்தமுடையதும் அத்தியாவசியமானதும் என்பது நிகழ்ச்சியில் பங்குபற்றிய ஊடகவியலாளர்களின் கருத்தாக இருந்தது. தங்களின் தொழில் வாழ்கைகயை தேசிய சகவாழ்வு மேம்பாட்டிற்காக பயன்படுத்துவது தொடர்பில் பரந்த அறிவை அந்த செயலமர்வின் மூலம் தாம் பெற்றுக் கொண்டதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் பிரதேச ஊடகவியலாளர்களுக்காக இடம்பெற்ற தங்குமதிட வசதியுடனான செயலமர்வாகும். இந் நிகழ்ச்சித்திட்டத்தில் 114 சிங்களம் மற்றும் தமிழ் பிரதேச ஊடகவியாளர்கள் பங்குபற்றினர். 2016ஆம் ஆண்டு இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் 3 இடம்பெற்றன. வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பான மாவட்டத்திலும், மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்திலும் மற்றும் தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்திலும் இவைகள் இடம்பெற்றன.





### சகவாழ்வுக்கான கவிஞர்கள் நிகழ்ச்சித்திட்டம்

கலை வடிவம் என்ற வகையில் கவிதையை பயன்படுத்தி தேசிய சகவாழ்வை மேம்படுத்தும் நோக்குடன் "சகவாழ்வுக்கான கவிஞர்கள்" நிகழ்ச்சித்திட்டம் கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் கௌரவ தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனின் பங்குபற்றலுடன் 2016.12.18ஆம் திகதி பத்தரமுல்ல "அபே கம" வளாகத்தில் இடம்பெற்றது.

தேசிய சகவாழ்வை வெளிப்படுத்தும் கலாசார நிகழ்ச்சிகள் மற்றும் புத்தாக்க முன்வைப்புகள் என்பன இந்த நிகழ்வை அலங்கரித்தன. இதன் போது அனைத்து இனக் குழுக்களுக்கும் உட்பட்ட இலங்கை கவிஞர்கள் தங்களின் கலாசார தனித்துவங்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தினர். பார்வையாளர்களிடத்தில் தேசிய சகவாழ்வின் முக்கியத்தும் புத்தாக்கமிக்கதாகவும் ருசிகரமாகவும் முன்வைத்ததுடன் தேசிய சகவாழ்வு மேம்பாடு தொடர்பில் சமூகத்தில் புதிய கதையாடல் கட்டியெழுப்ப இந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக முடிந்தது.

கவிஞர்களினால் சகவாழ்வு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட படைப்புகள் அடங்கிய பத்திரிக்கையொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது.

அரசியல் பிரதிநிதிகள், பல்வேறு மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி கவிஞர்கள் மற்றும் பொது மக்கள், இளைஞர்கள் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றினர்.










**பெண் தலைவர்கள் சமூக ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டங்களுக்கான மீளாய்வு நிகழ்ச்சித்திட்டம்**

2014ஆம் ஆண்டு பெண் தலைவர்கள் சமூக ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதற்காக கருத்திட்டம் மொணராகல மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து 30 பெண்களின் பங்குபற்றலுடம் இடம்பெற்றது. இந்த கருத்திட்டத்தில் பயிற்சி பெற்ற பெண்களின் பங்குபற்றலுடன் மீளாய்வாக 2015ஆம் ஆண்டு நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது. இவ்வாறு பயிற்சி பெற்ற பெண்கள் குழுவின் ஊடாக அவர்களின் பிரதேசத்திற்கு உரித்தான பிரச்சினைகளை அடையாளம் கண்டு, கருத்திட்ட அறிக்கையை அமைச்சின் விடயப்பரப்பிற்கு உட்பட்டவகையில் 2016ஆம் ஆண்டில் தயாரித்து அனுப்பும்படி தெரிவிக்கப்பட்டது.

இதன் போது மொணராகல மாவட்டத்தில் அனுப்பப்பட்ட கருத்திட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டத்தில் மொணராகல மாட்டத்தில் உள்ள சமூக பிரச்சினைகளில் ஏழை மக்கள் வாழுகின்றனர், குறை வயது திருமணம், சிறுவர் துஸ்பிரயோகம், குடும்ப வன்முறை, போதைப் பொருட்களுக்கு அடிமையாதல் ஆகிய பிரச்சினைகளை வெளிப்படுத்தப்பட்டன. போதை பொருள் நிவாரணம் மற்றும் தீர்வு தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. இதன் போது மது மற்றும் புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி துண்டுபிரசுரம் மற்றும் காணொலி மூலம் தெளிவுப்படுத்தப்பட்டதுடன் தீர்வுகளை பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் மற்றும் அதற்கு அடிமையாகியுள்ள வேறு ஒருவரை அதில் இருந்து மீட்டல் பற்றியும் இதன் போது விளக்கப்பட்டன. சிறு வயதில் இருந்தே தொலைக்காட்சி நாடகங்கள், கார்டூன் சினிமா, விளம்பரப்படங்கள் மற்றும் நாவல் ஆகிய ஊடகங்கள் ஊடாக புகைப்பிடித்தலுக்கு தூண்டும் விதம் பற்றி தெளிவூட்டப்பட்டன. நிகழ்ச்சிக்கு பல்வேறு பாதிப்புக்கு உள்ளான மற்றும் பெற்றோரை இழந்த சிறுவர் இல்லங்களில் வாழும் பிள்ளைகளும் பங்குபற்றியமையினால், போதை பொருள் பாவிப்பதானால் குடும்பத்தில் எற்படும் சண்டைகள் மற்றும் பெற்றோர் பிள்ளைகளில் இருந்து பிரிதல், பெற்றோர்கள் அவர்களிடத்தில்

ஒதுங்குதல் இடம்பெறும் விதம் என்பன தொடர்பாக பாடசாலை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சிங்கள மற்றும் தமிழ் மாணவர்கள் பங்குபற்றினர்.

குடும்ப வன்முறையை குறைக்கும் விதம் மற்றும் அதற்கான தீர்வு மற்றும் அன்றாட வாழ்வில் தேவையான சட்டங்கள் பற்றி பிரதேசத்தில் உள்ள பெண்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. பெண்களினால் குடும்பத்தில் நடந்து கொள்ள வேண்டிய விதம் தொடர்பாக தெளிவூட்டப்பட்டு குடும்பத்தில் பிணைப்பபை ஏற்படும் விதம் பற்றிய காணொலி மூலம் காண்பிக்கப்பட்டது. அதற்காக எடுக்கப்பட வேண்டிய சட்டரீதியான மற்றும் சட்டரீதியற்ற ஆலோசனை சார் தீர்வுகள் மற்றும் தீர்வுகள் வழங்கப்படும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள் பறறி இதன் போது வந்திருந்த பெண்களுக்கு விழிப்பூட்டப்பட்டது. குடும்ப வன்முறை முதலாவதாக ஏற்படுவது பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வழங்கும் ஆலோசனை அடிப்படையில் என்பது தெளிவூட்டப்பட்டது. அத்தோடு பெண்கள் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுடன் நல் உறவை பேணிக்கொள்வது எவ்வாறு என்பது பற்றியும், கணவர் மற்றும் பிள்ளைகளிடையே உறவுகளை மேலும் வளர்த்து பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது. மனைவி, தாய் என்ற வகையில் குடும்பத்தின் உறுப்பினர்கள் மற்றும் தான் நோய்களில் இருந்து விடுபடுவது எவ்வாறு என்பது பற்றியும் வெளி பிரச்சினைகள் வீட்டினுள் நுழைவதை தடுத்து, மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்துவது எவ்வாறு என்பது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டன.

இதற்காக வடக்கு மாகாண நிலையத்தின் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினூடாக முன்வைக்கப்பட்ட கருத்திட்டங்களில் இருந்து போதை பொருள் நிவாரண நிகழ்ச்சித்திட்டம் தெரிவு செய்யப்பட்டது. சமகால தேவையாக உள்ள இந்த பிரச்சினை தொடர்பாக வட மாகாண நிலையத்துடன் இணைந்து போதை பொருள் நிவாரணம் தொடர்பாக இளைஞர் சமூகம் விழிப்பூட்டப்பட்டது.

மது மற்றும் போதை பொருட்களுடன் தொடர்பான எதிர்பார்ப்புகளை எதிர்க்கும் வல்லமையை ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் கிளிநொச்சி, நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றன. இதன் போது போதை பொருள் பாவிப்பதனால் ஏற்படும் உண்மையான அனுபவம், மது பாவிப்பதனால் எதிர்பாரக்கப்படும் திருப்தி யாது? மது பாவனையின் பின்னரான நடத்தை, போதை பொருள் தொழிற்துறையின் உபாயங்கள் என்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. மது மற்றும் புகைத்தலினால் ஏற்படும் விளைவுகள் இதன் போது விசேடமாக கலந்துரையாடப்பட்டதுடன் துண்டுபிரசுரம், கை நூல் மற்றும் ஸ்டிகர் என்பவை வழங்கப்பட்டு மேலும் சமூகத்தில் மது மற்றும் போதை பொருட்களை எதிர்க்கும் நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டன. மேலும் தொலைகாட்சி நாடகங்கள், திரைப்படம் மற்றும் காணொலிகள் ஊடக எடுத்துக்காட்டுகள் எடுத்தாளப்பட்டு போதை பொருட்கள் பாவனையை தூண்டும் உபாயம் மற்றும் அதனூடாக குடும்பத்திற்கு ஏற்படும் பாதிப்பு தெளிவுப்படுத்தப்பட்டது. அத்தோடு குழு செயற்பாட்டின் ஊடாக மது மற்றும் போதை பொருட்களை எதிர்ப்பதனை நடைமுறையில் மேற்கொள்ளக்கூடிய விதங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.

பாடசாலை மாணவர்கள், இளைஞர் சமூகம் மற்றும் பெண்கள் ஆகியோரை இலக்காக கொண்டு 2016ஆம் ஆண்டு இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் 3 இடம்பெற்றன. இதற்காக Healthy Lanka, FISD, Plan International ஆகிய நிறுவனங்களின் வளவாளர்கள் பங்களிப்பு செய்தனர்.









## அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்தப்படுதல் பற்றிய மதிப்பீட்டு ஆய்வு

அரச நிறுவனங்களில் அரசகரும மொழிகள் கொள்கை அமுல்படுத்தல் தொடர்பில் காணப்படும் இடைவெளிகளை அடையாளம் காணுதல் மற்றும் அமுல்படுத்தலை ஒழுங்குசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை அடையாளம் காணதல் நோக்குடன் ஆகிய இந்த ஆய்வு 2016.02.01ஆம் திகதியில் இருந்து 19ஆம் திகதி வரை இடம்பெற்றது. இது தெரிவு செய்யப்பட்ட 54 இரு மொழி பிரதேச செயலகப் பிரிவுகளில் இடம்பெற்றன. அந்த பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொலிஸ், பிரதேச செயலகம் மற்றும் வைத்தியசாலைகள் ஆகிய அரச நிறுவனங்களை உள்ளடக்கியதாக இந்த ஆய்வு இடம்பெற்றது.

சேவை வழங்குநர் மற்றும் சேவை பெறுநர் ஆகிய இரு பிரிவுகளையும் ஆய்வுக்கு உட்படுத்தல் இந்த ஆய்வின் முக்கிய அம்சம் என்பதோடு, அது சிங்களம் மற்றும் தமிழ் என்ற இரு மொழிகளிலும் இடம்பெற்றது.

UNDP நிறுவனம் மற்றும் SELAJSI கருத்திட்டம் ஆகியவற்றின் நிதி பங்களிப்புடன் இடம்பெற்ற இந்த ஆய்வில், அதன் நோக்கத்தினை மிகவும் வினைத்திறனான அடைந்து கொள்வதற்காக மிகவும் சுயாதீனமான மற்றும் விசேட திறன் கொண்ட நிறுவனத்தின் தேவைகருதி மாற்று கொள்கைக்கான நிலையம் (Centre for Policy Alternatives) தெரிவு செய்யப்பட்டது.

ஆய்வில் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர்கள்/ உதவுனர்களினால் தரவு திரட்டப்பட்டது. ஆய்வு இரு மொழிகளிலும் இடம்பெற்றமையினால் குறித்த உத்தியோகத்தர்களின் மொழிமூலத்தை கருத்திற் கொண்டு, மற்றைய மொழியில் கடமையாற்றக்கூடிய உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளர் பிரிவுகள் ஊடாக தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆய்வின் கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக அந்தந்த மாவட்டங்களில் கடமையாற்றும் தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர் உத்தியோகத்தர்கள் செயற்பட்டனர்.

ஆய்வின் இறுதி அறிக்கை தற்போது அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் முடிவுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் 2017ஆம் அண்டு அமைச்சினால் அரசகரும மொழிகள் கொள்கை மேம்பாடு தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும்.





**ஊடகம் மூலமாக சகவாழ்வை ஏற்படுத்தும் வானொலி நிகழ்ச்சி**

சகவாழ்வை ஏற்படுத்தல் மற்றும் அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்தல் என்ற தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் நோக்கத்தை பொது மக்களிடத்தில் பிரச்சாரம் செய்வதற்கு ஊடகங்கள் வாயிலான நிகழ்ச்சிகள் அவசியமானவையாகும். ஊடக நிகழ்ச்சிகளில் வானொலி நிகழ்ச்சிகள் முதன்மை இடத்தை பெறுவதுடன், அமைச்சின் நோக்கம், பணிகள் மற்றும் விடயப்பரப்புக்கு உட்பட்ட அமைச்சுக்கு உட்பட்ட நிறுவனங்களின் பணிகள் தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்பூட்டுவதற்காக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள சுதேசிய சேவையின் ஊடாக சுபாரதி வானொலி நிகழ்ச்சி சிங்கள மொழியிலும், தமிழில் தென்றல் சேவை ஊடாக விடியும் வேளை வானொலி நிகழ்ச்சியினூடாக தமிழ் மொழியிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையிலும் (பௌர்ணமி தினம் தவிர்ந்த) மு.ப. 07.00 மணியில் இருந்து 08.00 மணி வரை ஒலிபரப்பாகும். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 10 வானொலிகள் மூலமாக பிரதான செய்தி அறிக்கைக்கு முன்னர் இடம்பெறும் செய்திக்கான முன்னோட்டத்தின் போது அமைச்சின் செய்தி ஒலிபரப்பப்படுகிறது. நேயர்கள் அதிகளவில் செய்திகளை அடிக்கடி கேட்பதனால், செய்தி அறிக்கைக்கு முன்னர் அமைச்சரவையின் செய்தி இடம்பெறுவது அமைச்சு தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வு அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்த வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் செய்தி அறிக்கைக்கு முன்னரான பிரச்சாரம் என்பன இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 10 வானொலிகள் ஊடாக ஒலிபரப்பப்படுகிறது. 2016ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் 103 ஒலிபரப்பப்பட்டுள்ளதுடன், யாழ்ப்பாணம், கண்டி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் இருந்து 03 நேரலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.





**போதை பொருள் பாவனையினால் ஏற்படும் பாதகமான தாக்கங்கள் பற்றி இளைஞர் சமூகங்களுக்கு விழிப்பூட்டல்**

இலங்கையில் நாளுக்கு நாள் மோசமடையும் சமூக பிரச்சினைகளுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் போதைப் பொருள் பயன்பாடு தாக்கம் செலுத்துகிறது. இதற்கு சிறுவர், இளைஞர் மற்றும் பெரியவர் என அனைவரும் உட்பட்டுள்ளனர். அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அறிக்கைக்கு அமைய போதை பொருள் பாவனை குற்றத்திற்காக கைது செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

இந்த வகையில் நோக்குமிடத்து சமகால சமூகத்தில் போதை பொருள் பாவனையானது சமூக புற்றுநோயாக வளர்ச்சியடைந்து வருவதனால் அதை நோக்கி ஈர்க்கப்படும் இளைஞர் யுவதிகளை அதில் இருந்து மீட்பது எமது சமூக பொறுப்பாகும். எதிர்கால சந்தத்தியினரை இந்த சாபத்தில் இருந்து மீட்டல் மற்றும் தொடர்ச்சியாக விழிப்பூட்டல் நிகழ்சிகளை நடாத்தல் அத்தியாவசிய அம்சமாகும். நாட்டில் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு இளைஞர் சமூகம் வலுப்பெறல் வேண்டுமென்பதனால் இது தொடர்பாக அச் சமூகத்திற்கு விழிப்பூட்டல் அமைச்சின் பணியாகும்.

அந்த வகையில் மேற்கு மாகாணத்தில் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்தறை ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகங்களில் 12 நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன. இதன் போது போதை பொருள் பாவனையை தடுப்பதற்கும் அதன் மீது சவால் விடுவதற்கும் பழக்கப்படுத்துதல் இடம்பெற்றன. இதற்காக குழு செயற்பாடுகள் இடம்பெற்றதுடன் பங்குபற்றியவர்களுக்கு ஸ்டிக்கர்கள் 10வும் துண்டுபிரசுரம் 20வும் வழங்கப்பட்டன. அவர்கள் இன்றும் 08 அல்லது 10 பேரை இணைத்து கொண்டு இந்த விழிப்பூட்டலை செய்ய வேண்டும்.

இந்த நிகழ்ச்சிக்காக Healthy Lanka நிறுவனம், அரசசார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம், ADIC நிறுவனம், FISD (புத்தாக்க சமூக அபிவிருத்தி மன்றம்) ஆகிய நிறுவனங்கள் ஊடாக வளவாளர்கள் இலவசமாக வழங்கப்பட்டன.






**சகவாழ்வு மேம்பாட்டிற்காக கருத்திட்ட முன்மொழிவுகளை முன்மொழிதல்**

பால்நிலை, மதம், இன, வயது, வகுப்பு மற்றும் சாதி ஆகிய அடிப்படையில் ஓரங்கட்டப்பட்டுள்ள சமூக பிரிவுகளை வலுப்படுத்துவதனூடாக சகவாழ்வை மேம்படுத்த தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சினால் இவ் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்படுகிறது.

அந்த வகையில் அனுராதபுரம், மட்டக்களப்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரதேச செயலாளர் பிரிவுகள் மட்டத்தில் சகவாழ்வுவை மேம்படுத்தும் நோக்கத்துடன் மொழிச் சங்கங்கள் ஊடாக கருத்திட்ட முன்மொழிவுகள் அமைச்சுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், கருத்திட்டங்களை தெரிவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட சபையொன்றினூடாக பொருத்தமான கருத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன. குறித்த சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் கீழ் குறிப்பிட்டுள்ள கருத்திட்டங்கள் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டன.

இதன் கீழ் அனுராதபுர மாவட்டத்தில் **"போட்டிமிகு கல்வி முறையினுள் மக்கள் பற்றி சிந்திக்கும் மாணவர் சமூகத்தை ஏற்படுத்தல்"** என்ற கருத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் நான்கில் சமாதானம், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கம் என்ற பெயர்களில் வெவ்வேறு பிரிவுகளை ஏற்படுத்தல் மற்றும் சகவாழ்வை மேம்படுத்தல் தொடர்பிலான கற்பித்தல் பொருட்கள் நூலக பிரிவுக்கு வழங்குதல் இதனூடாக இடம்பெற்றது. **"மோதுவது எதற்காக? – பாடசாலை மாணவர்களின் படைப்புகள்"** என்ற கருத்திட்டத்தினூடாக

பல்வேறு இனக்குழுக்களை சார்ந்த மாணவர்களின் படைப்புகள் உள்ளடக்கிய சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது. **“அபிவிருத்தியடைந்த குடும்பம் மூலம் நல்லிணக்கம்”** என்ற கருத்திட்டத்தினூடாக இளம் பாடசாலை மாணவர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் சகவாழ்வு, போதைப் பொருள் பாவனையின் விளைவுகள், குடும்பம் மற்றும் அபிவிருத்தி என்பதை தொடர்பில் விழிப்பூட்டப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் **“இரசனையினூடாக சகவாழ்வு”** என்ற கருத்திட்டத்தில் பாடசாலை மாணவர்களிடையே சகவாழ்வை மேம்படுத்துவதற்கு வழிவகுக்கும் வகையில் நாடக போட்டியொன்று இடம்பெற்றது. **“சிங்கள தமிழ் சகோதரத்துவத்தின் கரங்கள் ஒற்றை இலங்கைக்கு”** கருத்திட்டம் ஊடாக ஓரங்கட்டப்பட்ட பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் இடம்பெற்றதுடன், இரு இனங்களின் கலாசாரம் வெளிப்படுத்தப்படும் கலாசார விழாவொன்றும் இந்த கருத்திட்டத்தில் இடம்பெற்றது. இதனூடாக 2016ஆம் ஆண்டு சா/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு பல்வேறு பாடங்களில் வகுப்புகள் நடாத்தப்பட்டன. ஓரங்கட்டப்பட்ட மாணவர்களை வலுப்படுத்தல் இதனூடாக இடம்பெற்றது. அத்தோடு **“பிரதேச செயலகத்தில் சித்திர போட்டியொன்றை நடாத்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அந்த சித்திரத்தை வரைதல்”** என்ற கருத்திட்டம் ஊடாக பிள்ளைகளிடத்தில் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் அவர்களின் படைப்பாற்றல் விருத்தி பெறுதல் இடம்பெற்றது. இவ்வாறான 07 கருத்திட்டங்கள் 2016ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டன.

**சகவாழ்வை மேம்படுத்துவதற்காக தள மட்டத்தில் இருந்து கலந்துரையாடல் நிகழ்சித்திட்டங்களை நடாத்தல்**

இனங்களுக்கிடையில் ஒத்துழைப்பு மற்றும் சகவாழ்வை ஏற்படுத்துவதற்கு தேவையான கலந்துரையாடல் நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் எமது அமைச்சின் பணியாகும். அதற்காக தள மட்டத்தில் இருந்து அனைத்து மக்கள் குழுக்களினதும் பங்களிப்பை பெற்றுக் கொள்வது அவசியமாகும். குறிப்பாக இது தொடர்பாக தள மட்டத்தில் உள்ள மக்கள் கொண்டுள்ள கருத்துக்களை வெளிக்கொண்டு வர வேண்டும். அதற்காக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அவர்களின் கருத்துக்கள் தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்வது அடிப்படை எதிர்பார்ப்பாகும். பல்வேறு இனக்குழுக்கள் வாழுகின்ற கஷ்ட பிரதேசங்களை தெரிவு செய்து அம் மக்கள் சகவாழ்வு தொடர்பாக கொண்டுள்ள கருத்துக்களை அவர்களே நேரடியாக பங்கு கொள்ளும் கலந்துரையாடல் ஊடாக பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், சகவாழ்வு தொடர்பாக காணப்படுகின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டு, எமது செயற்பாட்டு திட்டத்தை தயாரிக்கும் போது அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்க எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தவகையில் கேகாலை மாவட்டம் கொபெய்கனே பிரதேச செயலாளர் பிரிவின் அரலுகஸ்வெவ கிராம சேவகர் பிரிவில் உள்ள திஸ்ஸ ஐக்கிய நலன்புரி சங்க மண்டபத்தில் குறித்த நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது. சகவாழ்வு சங்கத்தின் பிரதிநிதிகள், சிறுவர்கள், பெரியவர்கள், இளைஞர்கள், பெண்கள், ஆண்கள் என அனைத்து தரத்திலும் உள்ள பொது மக்கள் அனைவரையும் இணைத்துக் கொண்டு சகவாழ்வு மேம்பாட்டிற்காக செய்யப்பட வேண்டிய முன்னெடுப்புகள் பற்றிய கலந்துரையாடல் மற்றும் கருத்துகளை பெற்றுக் கொள்ளல் இதன் போது இடம்பெற்றது.





**சகவாழ்வை மேம்பாடுத்துவதற்காக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய குழு என்ற வகையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு விழிப்பூட்டும் செயலமர்வு**

பல்கலைக்கழக மாணவர்கள் சமூகத்தில் வாழும் மிகவும் துடிப்பும், செயற்பாட்டுத் தன்மையும், புத்தாக்க சிந்தனையும் கொண்ட குழுவாகும். அவர்கள் எதிர்காலத்தின் முன்னணியினர் ஆவர். பல்கலைக்கழகத்தில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லிம் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். தேசிய சகவாழ்வின் ஊடாக தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்புவதற்காக இந்த பல்வகைமையை மிகவும் சிறப்பாக பயன்படுத்தக்கூடிய வகையில் பயன்படுத்த முடியும். தேசிய சகவாழ்வு நோக்கிய பயணத்தில் பங்களார்களாக இளம் பல்கலைக்கழக சமூகத்தை பயன்படுத்த முடியும் என்பதுடன் பல்வேறு சமூக கருத்துக்களை கொண்டுள்ள, அத்துடன் அதன் மீது ஆகர்சிப்பை விடயங்கள் பல்கலைக்கழக மாணவர்களின் மனப்பான்மையை வடிவமைக்கின்ற மற்றும் மிகவும் சிறந்த மாற்றத்திற்கான பிரதிநிதிகளாக செயற்படுவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் உண்டு. தேசிய சகவாழ்வை கட்டியெழுப்புவதற்கு பல்வேறு வகையில் செயற்படும் போது முதன்மை குழுவாக கருதி பல்கலைக்கழக சமூகத்துடன் இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டம் இடம்பெற்றது. பல்வேறு கலாசார குழுக்களிடையே புரிந்துணர்வுடன் சிந்தித்து தீர்மானங்களை எடுப்பதனூடாக இதனூடாக சந்தரப்பம் கிடைக்கும்.

2016ஆம் ஆண்டு இவ்வான நிகழ்ச்சித்திட்டங்கள் 02 இடம்பெற்றன. அவை மாத்தளை மற்றும் அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்றன. ரஜரட்ட, கிழக்கு மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களின் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் இதன் போது சமூகமளித்தனர்.

இதன் போது அரசகரும மொழிக் கொள்கை மற்றும் அதன் சட்ட ரீதியான ஏற்பாடுகள் எவை, அரசகரும மொழிக் கொள்கையின் வரலாறு, அது நடைமுறைப்படுத்தப்பட்ட விதம், அரசியலமைப்பினூடாக செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், மொழி உரிமை மீறப்படும் போது எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள், தாய் மொழியில் கடமைகளை செய்வதற்கு உள்ள உரிமை, சகவாழ்வுடன் தொடர்புடைய கருத்திட்டங்களை நடைமுறைறைப்படுத்தல், அதற்காக கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்களுக்கு விழிப்பூட்டல், பல்வேறு கலாசாரங்களுக்கிடையில் காணப்படும் பொது பண்புகள் என்பவை தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன் சகவாழ்வு மற்றும் இரசணை பற்றிய இசை நிகழ்ச்சியொன்றும் இடம்பெற்றது.







**இலங்கையர் என்ற அடையாளத்தை மேலும் உறுதி செய்வதற்கு பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள உப குழு**

பல்வேறு இனக் குழுக்களிடையே சமாதானம், நல்லிணக்கத்தை பேணுவற்கு மற்றும் இலங்கையர் என்ற அடையாளத்தை அனைத்து பிரஜைகளிடத்திலும் ஏற்படுத்துவதனை உறுதி செய்வதற்காக பொருத்தமான நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணும் நோக்கத்துடன் அமை/15/1756/702/021 ஆம் இலக்க மற்றும் 2015.12.03ஆம் திகதியைக் கொண்ட அமைச்சிரவை தீர்மானத்திற்கு அமைய உப குழுவொன்று தாபிக்கப்பட்டது. இந்த குழுவின் தலைவராக கௌரவ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களும் செயலாளராக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் செயலாளர் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன் முதலாவது கூட்டம் கௌரவ பிரதமர் தலைமையின் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள் என்போர் பங்குபற்றினர். சுதந்திர தின நிகழ்வில் தேசிய கீதம் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளில் பாடுவது என்பது இங்கு முன்மொழியப்பட்டது. இதற்கு ஏற்ற நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிப்பதற்காக மதத் தலைவர்கள், கலைஞர்கள் ஆகியோரை அழைத்து அவர்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அங்கு பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்களுக்கு அமைய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது.







**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**சகவாழ்வு பிரிவுக்கான நிதி முன்னேற்றம்**




| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| 01 | ஓரங்கட்டப்பட்டவர்களை வலுப்படுத்தல் | 2,500,000 | 2,098,485.60 | 83.93% |
| 02 | தேசிய சகவாழ்வுக்காக ஊடகத்தை பயன்படுத்தல் | 26,500,000 | 11,927,346.13 | 45.00% |
| 03 | சகவாழ்வுக்காக சமயத் தலைவர்களை இணைக்கும் நிகழ்ச்சிகள் | 700,000 | 778,018.80 | 111.14% |
| 04 | இளைஞர்களுக்கான போதைப்பொருள் நிகழ்ச்சி நடாத்துவதற்கான ஒதுக்கீடு | 2,000,000 | 1,470,628.01 | 73.53% |
| 05 | ஓவியம் மூலம் சகவாழ்வினை மேம்படுத்தல் | 2,000,000 | 2,012,981.00 | 100.54% |
| 06 | நடமாடும் சகவாழ்வு நிகழ்ச்சிகள் | 2,300,000 | 3,091,793.00 | 134.42% |
| | **மொத்தம்** | **36,000,000** | **21,379,252.54** | **59.38%** |

### 3.3. நிர்வாகப் பிரிவு

**அறிமுகம்**

அமைச்சில் சிறந்த காரியாலய நிர்வாக சூழலை கொண்டு நடாத்தல், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமை செய்தல், உத்தியோகத்தர்களது வேலை தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்தல், மற்றும் அமைச்சின் சேவைகளை அமுல்படுத்துவதற்கு உதவி புரிதல் போன்றன நிர்வாகப் பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

**நிர்வாகப்பிரிவின் நடவடிக்கைகள்**

- அமைச்சின் உள்ளக நிர்வாகம்.
- பதவி அனுமதி பெறல்.
- ஆட்சேர்ப்பு திட்டங்களை உருவாக்கள்.
- நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு தொடர்பான நடவடிக்கைகள்.
- தனியார் கோவை நடாத்துகை.
- ஒழுக்கம் தொடர்பான நடவடிக்கைகள்.
- பயிற்சி நடவடிக்கைகள்.
- கட்டிடம், வாகனம் உள்ளடங்களாக அனைத்து பௌதீக வளங்களினதும் நடாத்துகை.
- பாராளுமன்ற உபதேச செயற்குழுவினை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- அமைச்சரவைப் பத்திரிகை தயாரித்தல்.

## 3.4 திட்டமிடல் பிரிவு

**அறிமுகம்**

திட்டமிடல் பிரிவானது, தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய அமைச்சின் பிரதான பிரிவுகளில் ஒன்றாகும்.

அடையப்பெறும் பெறுபேறுகள், வினைத்திறன், விளைத்திறன் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக துறைசார் அடிப்படையில் அமுல்படுத்தப்படும் கருத்திட்டம்/ நிகழ்ச்சித்திட்டம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு என்பன திட்டமிடல் பிரிவில் மேற்கொள்ளப்படும். மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உயர் முகாமைத்துவ, நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கு முன்வைக்கப்படும்.

**திட்டமிடல் பிரிவின் பிரதான பணிகளாவன:**

- அமைச்சின் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம், வருடாந்த செயலாற்றுகைத் திட்டம் என்பவற்றை தயாரிக்க அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு.

- அமைச்சு அடையாளம் கண்டுள்ள முன்னோடி கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதனை ஒருங்கிணைத்தல்.

- மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் அதனை அமைச்சின் செயலாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம், வெளிநாட்டு உதவி மற்றும் வரவு செலவு திட்ட மதிப்பீட்டு திணைக்களம் மற்றும் ஏனைய அக்கறைகொண்ட பிரிவினர்களுக்கு சமர்பித்தலும்.

- முன்னேற்றம் மற்றும் செயற்பாட்டு திட்ட அறிக்கையை அமைத்து வரவு செலவு தொடர்பான கலந்துரையாடலில் பாராளுமன்றத்திற்கு முன்வைத்தல்.

- அமைச்சின் தரவுகளை பராமரித்தல், இற்றைப்படுத்தல் மற்றும் விருத்தி செய்தல்.

- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரித்து பாராளுமன்றத்திற்கும், நிதி அமைச்சுக்கும் கணக்காளருக்கும் சமர்ப்பித்தல்.

## 3.6 கணக்குப் பிரிவு

**அறிமுகம்**

இந்தப்பிரிவின் ஊடாக நிதி சேவைகள் வழங்கும் நிவடிக்கைககளை ஒருங்கிணைத்தல் அத்துடன் குறித்த பிரிவுகளை ஒருங்கிணைத்து அமைச்சுக்கான சாதகநிலையான நிதிசார் தகவல்களை மற்றும் நிதி முகாமைத்துவ முறைமையொன்றை தாபித்து பேணப்படுகிறது.

**கணக்குப் பிரிவின் பிரதான பணிகள்**

- பிரதம கணக்காளர் என்ற வகையில் அமைச்சின் செயலாளருக்கு அமைச்சின் நிதிக் கடப்பாடுகளை பூர்த்தி செய்யவும் பாராளுமன்றத்திற்கு வகைப்பொறுப்புக்கூறவும் உதவுதல்.

- அரசாங்கத்தின் நிதி விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கி செயற்படுதலை உறுதி செய்தல்.

- நிதி முகாமைத்துவம் உட்பட சிறந்த நிதி கணக்கீட்டு முறைமையை தாபித்தலும் பராமரித்தலும்.

- நிதி அறிக்கைகள் மற்றும் வரவு செலவு தேவைகளை தயாரித்தல்/இற்றைப்படுத்தல்/மீள்பார்வை செய்தல் மற்றும் பூர்த்தி செய்வதற்காக திறைசேரி, அமைச்சுக்கு கீழ்வரும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியுதவியுடனான கருத்திட்டங்களுடன் ஒருங்கிணைத்தல் நடவடிக்கைகள்.

- நிதி திட்டமிடல் மற்றும் வரவு செலவை தயாரித்தல்.

- உரிய நேரத்திற்கு மற்றும் துல்லியமான நிதி அறிக்கையிடலை உறுதிப்படுத்தல்.

- அமைச்சின் சொத்துக்களை முகாமை செய்தல்.

### 3.5 உள்ளக கணக்காய்வுப் பிரிவு

அமைச்சில் மற்றும் அதன் கீழ் உள்ள நிறுவனங்கள் ஆகியவற்றின் அணைத்து தளத்திலும் மேற்கொள்ளப்படும் சேவைகள் மற்றும் பணிகளை மீளாய்தல், அளவிடுதல், மதிப்பிடுதல், அத்துடன் உள்ளக நிர்வாக முறையில் விடய பங்களிப்பு தொடர்பாக அறிக்கை இடுவதன் மூலம் முகாமைத்துவத்திற்கு உதவுதல் இப்பிரிவின் நோக்கமாகும்.

**உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிகள்**

- பிழைகள் மற்றும் மோசடிகள் தடுப்பதற்காகவும் கட்டுப்பாட்டு முறைகளை வலுப்படுத்தவும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களில் அமுலாக்கப்படும் உள்ளக நிர்வாக முறைமையின் வெற்றிக்கான தன்மையை மதிப்பிடலும் உள்ளக நிர்வாகத்தை பலப்படுத்த உதவுதல்.

- கணக்குகள் மற்றும் வேறு அறிக்கைகளின் நம்பகத்தன்மையை நிர்ணயித்தல் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டு முறைகளினால் சரியான நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்குத் தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றனவா என்பதை பரிசீலனை செய்தல்.

- நிறுவனத்தின் பதவியணியினருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அவர்களின் செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்.

- அமைச்சு மற்றும் அதன் கீழ் இருக்கின்ற நிறுவனங்களின் சொத்துக்களை எல்லா வகையான பாதிப்புகளில் இருந்தும் எவ்வளவு துாரம் பாதுகாக்கப்படுகிறது என்பதை தேடிப்பார்த்தல்.

- தாபனக் கோவை, நிதிக்கோவை, பொது நிர்வாகம், திறைச்சேரி மற்றும் வேறு சுற்றறிக்கை மற்றும் நெறிப்படுத்துகை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை கண்காணித்தல்.

- தேவையான சந்தர்ப்பங்களில் விசேட விசாரணைகளை நடாத்தல்.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்களை நடாத்தல்.

- பணிகள், திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம் மற்றும் எந்த அளவில் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அளவுத்திட்டங்கள் இலக்கினை அடைவதை நோக்கியதாக உள்ளன என்பதை மதிப்பிடுதல்.

- காலத்துக்கு காலம் கணக்காய்வு முகாமைத்துவ திணைக்களம் வெளியிடும் வழிகாட்டல்கள் மற்றும் ஒழுங்குறுத்தல்களை கடைபிடித்து, குறித்த ஒவ்வொரு வருடத்திலும் காலண்டுக்கு ஒருமுறை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தல், அத்துடன் அந்த கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை உறுதிசெய்ய தொடர் செல் (follow -up) நடவடிக்கைகளை எடுத்தல்.

# 04.அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் அதன் முன்னேற்றம்

## 04. அரசகரும மொழிகள் திணைக்களம்

### அறிமுகம்

1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனமாக 1956.10.01 ஆம் திகதியன்று அரசகரும மொழிகள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. 1987-13ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் 1987- 16ஆம் அரசியலமைப்பு திருத்தத்திற்கும் அமைவாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகள் இரண்டும் இலங்கையின் அரசகரும மொழிகளாக்கப்பட்டதோடு, ஆங்கிலம் இணைப்பு மொழியாக்கப்பட்டது.

அரசியலமைப்பின் IVஆம் அத்தியாயத்தின் 18ஆம் மற்றும் 19ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மொழிக் கொள்கையை வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் நிறுவனமாக தற்போது அரசகரும மொழிகள் திணைக்களம் செயற்படுவதோடு, அதற்கமைய மேற்குறித்த மூன்று மொழிகளுக்குமுரிய மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்து அரசாங்கத்திற்கு வழங்கல், அரசாங்க உத்தியோகத்தர்களின் மொழித்தேர்ச்சியை விருத்தி செய்தல், கலைச்சொற்றொகுதிகளை தயாரித்தல், மொழி தொடர்பான பாடப்புத்தகங்கள் மற்றும் அகராதிகளை தொகுத்தல் முதலான பணிகள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன. ‘‘பாஷா மந்திரய’’, இலக்கம் 341/7,கோட்டே வீதி, ராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ள இத் திணைக்களத்தின் பிரதான பதவியை அரசகரும மொழிகள் ஆணையாளர் வகிக்கிறார்.

### தொலைநோக்கு

சகவாழ்வுடன் கூடிய சமாதானமான மும்மொழிச் சமூகம்.

### செயற்பணி

இன ஒற்றுமை மற்றும் சமாதானத்தை நோக்கமாகக் கொண்ட அரசகரும மொழிக் கொள்கையை வினைத்திறன்மிக்கதாக நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்கலும் ஒருங்கிணைத்தலும்.

### திணைக்களத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள்

- பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 மற்றும் 03 /2014 பிரகாரம் அரசகரும மொழித்தேர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டிய அரச உத்தியோகத்தர்களுக்கான எழுத்து மூல மற்றும் வாய்மூல பரீட்சைகளை நடாத்தலும் சான்றிதழ்களை வழங்கலும்.
- அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்களின் மொழிபெயர்ப்பு பணிகளை நிறைவேற்றல் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- பல்வேறு துறைகளுக்குரிய கலைச்சொற்றொகுதிகளை தொகுத்தல் (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்)
- அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சி பரீட்சைகளுக்கான பாடப்புத்தகங்களையும் வழிகாட்டல் நூல்களையும் தொகுத்தலும் விற்பனை செய்தலும்.
- மும்மொழி அகராதிகளை தொகுத்தல். (சிங்களம், தமிழ் தலைச் சொல்)

- நவீன தொழிநுட்ப முறைகளை பயன்படுத்தி சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைப் போன்றே சர்வதேச ரீதியான மொழிகளை கற்பித்தலும் பரீட்சைகளை நடாத்தலும்.
- வெளி நிறுவனங்களின் பணிக் குழுவினருக்கு மொழித் தேர்ச்சி பரீட்சைகளையும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளையும் நடாத்தல்.
- பல்கலைக்கழகங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் மொழிப்பெயர்ச்சி பாடநெறிகளை பயில்வோருக்கு செயன்முறைப் பயிற்சியை வழங்கல்.

மேற்குறித்த அனைத்து பணிகளையும் நிறைவேற்றதுவதன் பொருட்டு திணைக்களத்தில் அபிவிருத்தி, பரீட்சை, மொழிபெயர்ப்பு, மொழி ஆய்வுகூடம், மொழி ஆராய்ச்சி மற்றும் புத்தகத் தொகுப்பு, கலைச்சொற்றொகுதி தொகுப்பு, நூலகம் மற்றும் அகராதி ஆகிய பிரிவுகள்தாபிக்கப்பட்டுள்ளது.

## மொழிப்பெயர்ப்பு

### 01. மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்ற வசதிகளை வழங்குதல்

### I. புத்தகங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்களை அச்சிடுதல்

வல்லுனர்களுக்கு மற்றும் அரசகரும மொழியைக் கற்பதற்கு விருப்பமுள்ள அனைவருக்கும் எழுத்து மொழியொன்றாக ஈடுபடுத்திக் கொள்ளக்கூடியதாக பாடப்புத்தகங்கள் மற்றும் ஏனைய கைந்நூல்களை ஆக்கம் செய்தல் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் பிரதான பணியாகும். அதன்படி 2016 ஆம் வருடத்தில் பேச்சுத் தமிழ் புத்தககங்கள் 10,000 பிரதிகள் மற்றும் எழுத்துத் தமிழ் புத்தகங்கள் 5000 பிரதிகளும் அச்சிடப்பட்டது. இதற்கு மேலதிக அரச உத்தியோகத்தர்களின் மொழித் தேர்ச்சியை அளவிடுவதற்காக அந்தந்த மட்டங்களுக்கேற்ப நடாத்தப்படும் பரீட்சைக்கு சமாந்திரமாக I ஆம் மட்ட தமிழ் புத்தகத்தின் 5000 பிரதிகளும் II ஆம் மட்ட தமிழ் புத்தகங்கள் 9775 பிரதிகளும் அச்சிடப்பட்டுள்ளது.

மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்குத் துணையாகும் English for better communication, III ஆம் மட்டத்தின் சிங்களம் இறுவட்டு, III ஆம் மட்டத்தின் தமிழ் இறுவட்டு , Iv ஆம் மட்டத்தின் தமிழ் இறுவட்டு ஆகிய நூல்களின் பிரதிகள் 1000 வீதம் அச்சிட்டு நாடு முழுவதும் அனைத்து மாவட்ட செயலகங்களுக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச செயலகங்களுக்கும் கொள்வனவு செய்யக்கூடியவாறு விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதுவரை அரசகரும மொழித் தேர்ச்சிப் பரீச்சைக்கேற்ப அனைத்து மாவட்டங்களின் பாடப் புத்தகத் தொகுதி அச்சிட்டு முடிந்திருக்கின்றன. சிங்களம் மற்றும் தமிழ் மொழி கற்பிப்பதற்குத் துணையாகும் அந்த 08 பாடப்புத்தகங்கள் கீழ் காணப்படுபவையாகும்.

















**II. மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்தல்.**

அரச உத்தியோகத்தர்களின் மொழி ஆற்றலை மதிப்பிடுவதையும் இருமொழி ஆற்றலை ஊக்கப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு எழுத்து மற்றும் வாய்மூலப் பரீட்சைகளை நடாத்தப்பட்டதோடு, பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுதல் மற்றும் பரீட்சை பெறுபேறு ஆவணங்களை வெளியிடுதல் என்பன இடம்பெற்றது. தொழில்நுட்ப உபகரணங்களை பயன்படுத்தி கேட்டல் திறன் மதிப்பீட்டு பரீட்சை இத் திணைக்களத்தில் நடாத்தப்பட்டது. செவிமடுத்தல் திறன் மதிப்பீட்டு பரீட்சையை நடாத்தி அதன் பெறுபேறுகளுக்கேற்ப வாய்மூலப் பரீட்சை மாகாண மட்டத்திற்கு அமைய நடாத்தப்பட்டது. அதன் பிரகாரம் இப் பரீட்சைகள் நடைபெறும் முறையை பின்வருமாறு காணலாம்.





2016 ஆம் ஆண்டில் அரசகரும மொழித் தேர்ச்சி I,II,III,IV ஆம் மட்டங்களுக்காக 29,660 எழுத்து விண்ணப்பதாரிகள் தோற்றியுள்ளனர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் க.பொ.த.(சா/த) இரண்டாம் மொழியில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளுக்காகவும் வாய்மூலப் பரீட்சை நடாத்தப்படுவதன் கீழ் முன்னைய ஆண்டுகளில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த 36,069 உத்தியோகத்தர்களுக்காக வாய்மூலப் பரீட்சை நடாத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் 06 வெளிநிறுவனங்களில் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

மேற்குறித்த வாய்மூலப் பரீட்சையை நடாத்துவதற்கு 2016ஆம் ஆண்டில் ஆலோசகர்கள் இணைத்துக்கொள்ளப் பட்டனர். ஆலோசகர்களை ஆட்சேர்க்கப்படுவதற்கு பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கு 400 அளவிலான விண்ணப்பப் படிவங்கள் கிடைத்துள்ளதோடு நேர்முகப் பரீட்சையின் பின்னர் அவர்களை ஆலோசகர்களாக ஆட்சேர்த்துக் கொண்டு மாலம்பே தலாஹேன பிரஜா கல்வி நிலையத்தில் 04 நாள் ஒரு செயலமர்வு நடாத்தப்பட்டு அவர்களை ஆலோசகர்களின் குழுவிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டனர். தற்போது நாடு முழுவதும் நடைபெறுகின்ற வாய்மூலப் பரீட்சைகளில் வாய்மூலப் பரீட்சைக் குழுக்களின் தலைவர்களாக அவர்கள் செயற்படுகின்றனர். கீழ் காட்டப்படுவது அவ் ஆலோசகர்களின் பயிற்சி செயலமர்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களாகும்.





**02. அரச மற்றும் பகுதியளவிலான அரச நிறுவனங்களுக்காக மொழிபெயர்ப்பு சேவையை வழங்கல் மற்றும் கலைச்சொற்களை தயாரித்தல்.**

I. தரமான முறையில் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தரமான மொழிபெயர்ப்பு சேவையினை பெற்றுக் கொடுப்பது திணைக்களத்திற்கு உரிய இன்னுமொரு விசேட பணியாகும். மொழிபெயர்ப்பு சேவையினை வினைத்திறனாக்குவதை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பாளர்களுக்கு பயிற்சி வேலைத்திட்டமொன்று நடாத்தப்பட்டது. அந்த வேலைத்திட்டத்திற்கு 30 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். அதேபோன்று வெளிநாட்டு மொழி மொழிபெயர்ப்பாளர் குழுமமொன்று

ஸ்தாபிக்கப்படுவதன் நோக்கத்துடன் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் தற்போது 134 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

விசேடமாக மொழிபெயர்ப்பு செயல்முறையை மிகவும் இலகுவாக்குவதற்காக தொழில் நுட்பத்தை பயன்படுத்தல் காலத்துக்கேற்ப மிக முக்கியமானதாகும். அதனை நோக்கமாகக் கொண்டு ழூரேசு நிறுவனத்துடன் இணைந்து இருமொழி மற்றும் மும்மொழி வசதிகளை வழங்குவதற்காக ஒரு இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசியமான தரவுகளை களஞ்சியப்படுத்தி அவ் இணையத்தளத்தின் நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்துள்ளன.

மேலும் அரச சேவையில் அலுவலக கடிதங்களை எழுதுவதற்கு ஓர் வழிகாட்டியை வழங்குவதற்காக, அரச நிறுவனங்களின் கடிதங்களை தயாரிக்கும் போது ஏற்படும் குறைப்பாடுகளை சுட்டிக் காட்டி "அரச சேவையில் அலுவலக கடிதங்களை எழுவதற்கான வழிகாட்டி" என்ற நூல் தயாரித்து அச்சிடப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் 1000 பிரதிகள் அச்சிட்டு விற்பனைக்காக வினியோகிக்கப்பட்டுள்ளன.

1. II. நிபுணர்கள், வல்லுநர்கள், மாணவ மற்றும் எழுத்தாளர்கள், மற்றும் பொதுவாக அனைத்து மக்களினதும் அறிவு வளர்ச்சிக்கு உதவும் வகையில் புதிய மும்மொழி கலைச்சொற்களை திணைக்களத்தின் கலைச்சொல் அகராதிப் பிரிவால் தயாரிக்கப்படுகின்றது. அதன்படி, மனித வள முகாமைத்துவம், மும்மொழி கருத்திட்ட முகாமைத்துவம், பௌத்த சமயம் என பாடங்களுக்கேற்ப கலைச்சொற்றொகுதிகளை தயாரித்து திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## 03. தேசிய மற்றும் சர்வதேச மொழி ஆற்றலை மேம்படுத்தல்

தேசிய மற்றும் சர்வதேச மொழிகளை கற்றுக்கொள்வதற்கு விருப்பமுடையவர்களுக்காக நவீன தொழில்நுட்பத்துடனான மொழி ஆய்வுகூடமொன்றில் சிங்களம், தமிழ். ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் அரையாண்டு கற்கைநெறிகளாக நடைபெறுகின்றது. 2016ஆம் ஆண்டில் 2591 மாணவர்களுக்கு சிங்களம், தமிழ். ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. அவ்வாறே இப் பாடநெறிகளில் ஆலோசகர்களாக கடமையாற்றுவற்கு 50 மொழி ஆலோசகர்களும் 2016ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். மேலும், 32 மாணவர்களுக்காக ஒரே நேரத்தில் கல்வி நடவடிக்கைகளை நடாத்துவதற்கு புதிய மொழி ஆய்வுகூடமொன்று கட்டிமுடிக்கப்பட்டுள்ளது.





## 04. மும்மொழி கலைச் சொல் அகராதி தயாரிப்பு

இத் திணைக்களத்தினால் இதுவரை காலமும் பாரிய குறைபாடாக இருந்த சிங்கள கலைச்சொற்களுடனான மும்மொழி அகராதி தொகுக்கப்பட்டுள்ளது. இந்த அகராதியில் ஏறத்தாழ 26000 சொற்கள் உள்ளடங்கியுள்ளன. அதில் 5000 பிரதிகள் அச்சிட்டு கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழ் கலைச்சொற்களுடன் மும்மொழி அகராதியின் அனைத்து வேலைகளும் முடிவடைந்து தற்போது அச்சிடுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதனூடாக மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளைப் போன்று தமிழ் மற்றும் சிங்கள மொழி ஆலோசகர்களுக்கும் இது தொடர்பாக ஆர்வமுடைய தொழில் புரிபவர்களுக்கும் மிகுந்த பயனுடையதாக அமையும். கீழே காட்டப்படுவது சிங்கள தலைப்புக்களுடன் மும்மொழி கலைச்சொல் அகராதியின் முன்பக்க அட்டையின் பிரதியாகும்.




**விசேட விடயங்கள்**

1956ஆம் ஆண்டில் அரசகரும மொழிகள் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு 2016ஆம் ஆண்டில் இத் திணைக்களத்தின் 6ஆவது ஆண்டு விழா நடாத்தப்பட்டுள்ளது. இந்த வைபவத்தில் பிரதான விரிவுரை முன்னால் சபாநாயகர் வி.ஜ.மு. லொகுபண்டார அவர்களினால் நடாத்தப்பட்டது. ‘‘நல்லிணக்கத்துடன் கூடிய சமூகமொன்று’’ என்ற கருப்பொருளின் கீழ் தனது விரிவுரையில் ‘‘இத் திணைக்களத்தினால் தற்போதைய சமூகத்திற்கு பாரிய சேவையை வழங்க முடியும்’’ என்பது இவரின் பிரதான கருத்தாக இருந்தது.

இதற்கு மேலதிகமாக, சிங்களம் மற்றும் தமிழ் கலாசார அழகினை வெளிக்காட்டும் சந்தர்ப்பமும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கீழே காணப்படுவது அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் எடுக்கப்பட்ட புகைப்படமாகும்.






**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**அரசகரும மொழிகள் திணைக்களத்தின் நிதி முன்னேற்றம்**




| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| 01 | தேசிய மற்றும் சர்வதேச மொழி ஆற்றலை மேம்படுத்தல் | 10,550,000 | 9,319,718 | 88.34% |
| 02 | மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்கு உதவுகின்ற வசதிகளை வழங்குதல், புத்தகங்கள் மற்றும் பயிற்சிப் புத்தகங்களை அச்சிடுதல் | 8,100,000 | 8,583,890 | 105.97% |
| 03 | மொழித் தேர்ச்சிப் பரீட்சைகளை நடாத்தல். | 19,000,000 | 19,827,440 | 104.35% |
| 04 | மொழிபெயர்ப்பு சேவையை வழங்கல் | 7,350,000 | 3,934,662 | 53.53% |
| | **மொத்தம்** | **45,000,000** | **41,665,709** | **92.59%** |

# 05. அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அதன் முன்னேற்றம்

## 05. அரசகரும மொழிகள் ஆணைக்குழு

### அறிமுகம்

அரசகரும மொழிகள் ஆணைக்குழு 1991 மற்றும் 18 ஆம் இலக்க அரசகரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் மூலம் இந்த ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ளது. ஆணைக்குழு மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்டது. இவர்களுள் ஒருவர் தலைவராக ஜனாதிபதி அவர்களால் பெயர் குறிப்பிடப்படுவார். அரசகரும மொழிகள் திணைக்களத்தின் ஆணையாளர் அதிகார பூர்வமாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆவார். 2014 ஆகஸ்ட் மாதம் 05ம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் ஆணைக்குழுவுக்கான புதிய தலைவர் உட்பட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### தொலை நோக்கு

பொது மக்களுக்கு சேவை வழங்கும் அணைத்து நிறுவனங்களிலும் அரச கரும மொழிகள் கொள்கை அமுலாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக பலமிக்க நிறுவனமாதல்.

### பணிநோக்கு

அரச கரும மொழிகள் கொள்கை தொடர்பான விசாரணை கண்காணிப்பு கல்வி மற்றும் ஆலோசனை மூலம் பொதுமக்களின் இரு மொழி தேவையினை வழங்குதல்.

### நோக்கங்கள்:-

- அரசகரும மொழிகள் பயன்பாடு பற்றிக் கொள்கை அடிப்படையிலான அடிப்படைகளை விதந்துரைத்தல் மற்றும் அரசியலமைப்புத் திட்டத்தின் ைை பாகத்தில் உட்படுத்தப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படுத்துதல் பற்றி விழிப்பாயிருத்தலும் மேற்பார்வை செய்தலும்.

- இங்கு இதன் பின்னர் தொடர்பான மொழி எனக் குறிப்பிடப்படும் அரசியலமைப்புத் திட்டத்தின் 18ம் பிரிவில் குறிப்பிடப்பட்ட மொழிப்பாவனை அரசியலமைப்புத் திட்டத்தின் ivஆம் அத்தியாயத்தின் கருத்துக்கும் எண்ணத்துக்கும் ஏற்ற விதத்தில் நடைபெறுகின்றன என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவைப்படக்கூடிய அணைத்துச் செயல்களையும் செய்தலும், நடவடிக்கை மேற் கொள்ளுதலும்.
- அரசகரும மொழிகளை மதிப்பிடுதலை உற்சாகப்படுத்துதலும் அவற்றின் நிலமை சமத்தன்மை மற்றும் பயன்படுத்தும் உரிமையினை ஏற்றல், நடாத்திச் செல்லுதல் மற்றும் முன்னெடுத்துச் செல்லுதல்.
- தனது முயற்சியினால் மற்றும் கிடைக்கும் முறைப்பாடுகளுக்குப் பதிலாக எனும் இரு முறைகளிலும் தேடுதல்களை நடாத்துதல், மற்றும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளினால் ஏற்படுத்தப்பட்டுள்ள படி பதிவேற்பாடுகளைச் செய்தல்.

### பணிகள்

- குறித்த மொழிகளின் ஏதாவதொரு மொழியின் அந்தஸ்த்து அல்லது பிரயோகம் தொடர்பில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய ஏதாவது கட்டளை வழிக்காட்டல்கள் மற்றும் நிர்வாக அனுபவம் தொடர்பாக மீளாய்வினை ஆரம்பித்தல்.
- குறித்த மொழிகளின் அந்தஸ்த்து அல்லது பிரயோகம் தொடர்பில் தேவையானது அல்லது தொடர்பான என ஆணைக்குழுவினால் கருதப்படக்கூடிய ஆய்வு அல்லது கொள்கை விளக்கத்தை வெளியிடல் அல்லது பயன்படுத்தல்.

- குறித்த மொழிகளின் அந்தஸ்த்து அல்லது பிரயோகம் தொடர்பில் பொருத்தமானது என ஆணைக்குழுவினால் கருதப்படக்கூடிய அவதானம் அல்லது கொள்கை பிரகடனத்தை வெளியடல் அல்லது பயன்படுத்தல்.
- குறித்த மொழிகளின் தரம் அல்லது பயன்பாடு தொடர்பாக பொருத்தமானது என ஆணைக்குழுவினால் கருதப்படும் வெளியீடுகள் அல்லது வெகுஜன ஊடக விளம்பரங்களுக்கு அனுசரனை வழங்குதல் அல்லது அவற்றை ஆரம்பித்தல் உட்பட பொது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடல்.
- ஏதாவது அசையும் அல்லது அசையா சொத்தை கொள்வனவு செய்து அல்லது வேறுவகையில் கைப்பற்றல் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு பெறல் அல்லது வழங்குதல் அடகு வைத்தல் வேறு வகையில் கைமாற்றுதல்.
- ஆணைக்குழுவின் நோக்கத்தை அடைந்துக் கொள்ள தேவையான பயிற்சி அல்லது ஆணைக்குழுவின் அதிகாரங்களை அமுலாக்க தேவையான அல்லது தேவையின் பொருட்டான வேறு அனைத்து விடயங்களையும் செய்தல்.

**மொழிக் கணிப்பாய்வுகள்**

அரசியலமைப்புச் சட்டத்தில் காணப்படும் அரசகரும மொழிகள் தொடர்பான ஏற்பாடுகள் அரச நிறுவனங்களில் முழுமையாகக் கைக்கொள்ளப்படுகின்றனவா இல்லையா என்பதைக் கண்காணிக்கும் முகமாகவே மொழிக் கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இம் மொழிக் கணிப்பாய்வுகளின்போது, அரச நிறுவனங்களில் அரசகரும மொழிக் கொள்கை அமலாக்கம் தொடர்பில் சோதனையிடப்படுவதோடு அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவாகச் செயற்படாதவிடத்து சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவருக்குப் பரிந்துரைகளும் வழங்கப்படுகின்றன. அரச நிறுவனங்களில் சரியான முறையில் அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மக்களது மொழியுரிமைகளைப் பாதுகாத்தலே இக் கணிப்பாய்வுகளின் குறிக்கோளாகும். பொதுமக்களுக்கு நேரடியாகச் சேவை வழங்கும் அரச நிறுவனங்களாகக் கருதப்படும் பிரதேச செயலகங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்கள் என்பன இதன்கீழ் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

**மொழிக் கணிப்பாய்வுகளின்போது பின்வரும் விடயங்கள் கருத்திற்கொள்ளப்படுகின்றன.**

- நிறுவன வளாகத்தினுள் பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பலகைகள். (பெயர்ப் பலகைகள், அறிவித்தற் பலகைகள், அறிவுறுத்தற் பலகைகள்)
- பொதுச் சேவையில் பயன்படுத்தப்படும் சகல ஆவணங்கள்.
- அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான விழிப்புணர்வு.
- உத்தியோகத்தர்களின் தொடர்பாடற் திறன்.
- சிங்களம் / தமிழ் மொழிப் பயிற்சிநெறிகள்.
- உத்தியோகத்தர்களின் மொழியாற்றல்.
- நிறுவனம் சம்பந்தப்பட்ட விசேடமான விடயங்கள்.

(உதா - பொலிஸ் நிலையங்கள் - முறைப்பாடுகளைப் பதிவுசெய்தல்.
பிறப்பு / விவாக / இறப்பு பதிவாளர் - அரசகரும மொழிகளில் சான்றிதழ்கள் வழங்குதல்.)

மேற்கூறிய விடயங்களின் அடிப்படையிலும் மொழிக் கணிப்பாய்வுகளின்போதான அவதானிப்புகளின் அடிப்படையிலும் அரசகரும மொழிக் கொள்கைக்கு அமைவாகச் செயற்படாத நிறுவனங்களுக்குப் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன. இப் பரிந்துரைகளின் அமலாக்கம் குறித்தும் ஆணைக்குழு மேற்பார்வைசெய்யும். அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் 2016 ஆம் ஆண்டு (44) நாற்பத்துநான்டு மொழிக் கணிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பிரதேச செயலகங்கள்**

01. பிரதேச செயலகம் - கோமரன்கடவல
02. பிரதேச செயலகம் - தம்பலகாமம்
03. பிரதேச செயலகம் - திருகோணமலைப் பட்டிணமும் சூழலும்
04. பிரதேச செயலகம் - லங்காபுர
05. பிரதேச செயலகம் - வெலிக்கந்த
06. பிரதேச செயலகம் - பாத்ததும்பரை
07. பிரதேச செயலகம் - ரத்தோட்டை
08. பிரதேச செயலகம் - கெக்கிராவை
09. பிரதேச செயலகம் - கஹட்டகஸ்திகிலிய
10. பிரதேச செயலகம் - ஹொரவப்பொத்தானை
11. பிரதேச செயலகம் - பன்வில
12. பிரதேச செயலகம் - மெததும்பரை
13. பிரதேச செயலகம் - பண்டாரவளை
14. பிரதேச செயலகம் - மஹா ஓயா
15. பிரதேச செயலகம் - தமனை
16. பிரதேச செயலகம் - உகனை

**பொலிஸ் நிலையங்கள்**

1. கோமரன்கடவல பொலிஸ் நிலையம்
2. மொரவெவ பொலிஸ் நிலையம்
3. தம்பலகாமம் பொலிஸ் நிலையம்
4. கந்தளாய் பொலிஸ் நிலையம்
5. திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பொலிஸ் நிலையம்
6. புலஸ்திபுர பொலிஸ் நிலையம்
7. வெலிக்கந்த பொலிஸ் நிலையம்
8. குருந்துவத்தை பொலிஸ் நிலையம்
9. வத்தேகம பொலிஸ் நிலையம்
10. கம்பளை பொலிஸ் நிலையம்
11. தவுலகலை பொலிஸ் நிலையம்
12. பேராதனை பொலிஸ் நிலையம்
13. கெக்கிராவை பொலிஸ் நிலையம்
14. கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் நிலையம்
15. ஹொரவப்பொத்தானை பொலிஸ் நிலையம்
16. பண்டாரவளை பொலிஸ் நிலையம்
17. கலகா பொலிஸ் நிலையம்
18. மகா ஓயா பொலிஸ் நிலையம்
19. தமனை பொலிஸ் நிலையம்
20. உகனை பொலிஸ் நிலையம்
21. அச்சுவேலி பொலிஸ் நிலையம்
22. நெல்லியடி பொலிஸ் நிலையம்
23. பருத்தித்துறை பொலிஸ் நிலையம்
24. சுண்ணாகம் பொலிஸ் நிலையம்
25. தெல்லிப்பளை பொலிஸ் நிலையம்
26. மானிப்பாய் பொலிஸ் நிலையம்
27. தெல்தெனிய பொலிஸ் நிலையம்
28. பன்வில பொலிஸ் நிலையம்
29.

## மொழிக் கணிப்பாய்வுகளின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்




















## 02. முறைப்பாடுகளை விசாரணைசெய்தல்

பொதுமக்களிடமிருந்து ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரணைசெய்தல் ஆணைக்குழுவின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இம் முறைப்பாடுகள் கடிதங்கள், மின்னஞ்சல்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளின் மூலம் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெறுகின்றன. முறைப்பாடுகளை விசாரிக்கையில், குறித்த முறைப்பாடு தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனத் தலைவரின் அவதானிப்புகளைக் கேட்டறிந்து அவ் அவதானங்களின் அடிப்படையில் முறைப்பாடுகளுடன் தொடர்பான பரிந்துரைகள் வழங்கப்படுவதோடு இப்பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக ஆணைக்குழு தொடர்ச்சியாகக் கண்காணிக்கும்.

2016 ஆம் ஆண்டில் (133) நூற்றுமுப்பத்துமூன்று முறைப்பாடுகள் ஆணைக்குழுவிற்குக் கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றுள் (108) நூற்றுஎட்டு முறைப்பாடுகள் விசாரித்துத் தீர்வுகாணப்பட்டன.

எடுத்துக்காட்டாக,

01. கொழும்புப் போக்குவரத்துப் பிரிவினால் பொதுமக்களுக்காகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த வீதி ஒழுங்கு தொடர்பான பெயர்ப் பலகைகள் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரமே காணப்படுவதாக முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றிருந்தது. பின்னர் இவ் விடயம் குறித்துப் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டதையடுத்து குறித்த அறிவுறுத்தற் பலகைகள் மும்மொழிகளிலும் தயாரிக்கப்பட்டுப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

02. எழுத்துப் பிழைகளுடன் காணப்பட்ட கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையத்தின் இலத்திரனியல் நேர அட்டவணைப் பலகை ஆணைக்குழுவின் பரிந்துரைகளையடுத்துத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.




## 03. அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள்.

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது, அரச நிறுவனங்களுக்கு அரசகரும மொழிக் கொள்கை தொடர்பில் விழிப்புணர்வூட்டும் முகமாகப் பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் அதன் சட்டப் பின்னணி தொடர்பிலும் அரச உத்தியோகத்தர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்புப் பற்றி விழிப்புணர்வூட்டுவதே இதன் நோக்கமாகும்.
பொதுவான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், இனங்காணப்பட்ட துறைகளுக்குரிய அரச உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் என்பன இதன்கீழ் முன்னெடுக்கப்படுகின்றன.

பொதுவான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பொதுமக்களுடன் நேரடித் தொடர்பைப் பேணிவரும் அரச நிறுவனமான பிரதேச செயலக உத்தியோகத்தர்களை விழிப்பூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

அதுபோன்று, அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான சுற்றுநிருபங்கள், மக்களது மொழியுரிமைகளைப் பாதுகாப்பதில் அரச உத்தியோகத்தர்களுக்குள்ள பொறுப்பு மற்றும் மொழித்தேர்ச்சிப் பரீட்சைகள் தொடர்பில் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டனர். அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் அரசகரும மொழிகள் ஆணைக்குழு மற்றும் அரசகரும மொழிகள் திணைக்களம் என்பவற்றின் வகிபாகம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது. அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பிலும் இந் நிகழ்வுகளின்போது ஆலோசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கிக் கலந்துரையாடப்படும்.
இனங்காணப்பட்ட துறைகளுக்குரிய அரச உத்தியோகத்தர் குழுக்களை விழிப்பூட்டலின்கீழ் 2016 ஆம் ஆண்டில் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களுக்கு அரசகரும மொழிக் கொள்கைகள் சம்பந்தமாக விழிப்பூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் 2016 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவினால் (18) பதினெட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

1. பிரதேச செயலகம் - கொழும்பு
2. பிரதேச செயலகம் - திம்பிரிகஸ்யாய
3. பிரதேச செயலகம் - திருகோணமலை
4. பேராதனை பொலிஸ் நிலையம்
5. ஊவா மாகாண சபை ஆளுநர் மற்றும் அதன் உயர்மட்ட நிர்வாகிகளுடனான கலந்துரையாடல்.
6. பிரதேச செயலகம் - ரத்தோட்டை
7. பிரதேச செயலகம் - காலி பட்டிணமும் சூழலும்
8. பிரதேச செயலகம் - வெலிக்கந்த
9. பிரதேச செயலகம் - லங்காபுர
10. பிரதேச செயலகம் - போத்தல
11. பிரதேச செயலகம் - வெலிவிட்ட – திவித்துர
12. பிரதேச செயலகம் - பெந்தோட்டை
13. நியதிச்சட்டசபைத் தலைவர்/இயக்குநர் பொது/நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு.
14. வடமேல் மாகாண ஆளுநர் மற்றும் அதன் பிரதம செயலாளருடன் கலந்தரையாடல்.
15. பிரதேச செயலகம் - யக்கலமுல்லை
16. பிரதேச செயலகம் - ரத்மலானை
17. பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம்
18. புகையிரத நிலைய அறிவிப்பாளர்களுக்கான பயிலரங்கு.

**புகையிரத நிலைய அறிவிப்பாளர்களுக்குப் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்.**

புகையிரதத் திணைக்களத்தைச் சேர்ந்த (35) முப்பத்துஐந்து அறிவிப்பாளர்களுக்குக்கான நான்கு – நாள் பயிற்சிநெறியொன்று இத் திட்டத்தின்கீழ் நடாத்தப்பட்டது. புகையிரத நிலைய அறிவிப்புகள் மூன்று மொழிகளிலும் மேற்கொள்ளப்படுவதில்லை எனக் காலத்துக்குக் காலம் கிடைத்த முறைப்பாடுகளையடுத்துப் புகையிரத நிலைய அதிகாரிகளுடன் இடம்பெற்ற சில கலந்துரையாடல்களின் பிற்பாடு மும்மொழிகளிலும் அறிவிப்புகளை மேற்கொள்வதற்கான பயிற்சிநெறியொன்று அறிவிப்பாளர்களுக்கு நடாத்தப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில்

பயிலரங்கில் கலந்துகொண்டவர்களுக்கான மதிப்பீடொன்று நடாத்தப்பட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.






**விழிப்புணர்வு நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்**

பேராதனை பொலிஸ் நிலையம்



பிரதேச செயலகம் - ரத்தோட்டை



பிரதேச செயலகம் - ரத்மலானை



வடமேல் மாகாண ஆளுநருடன் இடம்பெற்ற கலந்தரையாடலின் போது



**04. இருமொழிப் பிரதேசங்களிலுள்ள சகல அரச நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வுச் சுவரொட்டிகளை வழங்குதல்.**

மக்களிடத்தே அவர்களுடைய மொழியுரிமைகள் பற்றி விழிப்புணர்வூட்டுவதும் ஆணைக்குழுவின் மற்றுமோர் இலக்காகும்.
இதனடிப்படையில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இரண்டாயிரம் சுவரொட்டிகள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ளன. தமது மொழியுரிமைகள் மீறப்படும்பட்சத்தில் மக்கள் எவ்வாறு முறையிடுவது என்பது தொடர்பில் விழிப்புணர்வூட்டும் விதமாக இச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டஉள்ளன. அவ்வகையில் முறைப்பாடுகள் வாய்மூலமாகவோ எழுத்துமூலமாகவோ அல்லது மின்னஞ்சல், முகநூல், வைபர் மற்றும் 1956 என்ற அழைப்புமைய இலக்கத்தினூடாகவோ மேற்கொள்ளப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் பற்றி மக்களுக்கு அறிவுறுத்தப்படும் நோக்கில் தயாரிக்கப்பட்டுள்ளன.

அடுத்த வருடத்திற்குள் ஒவ்வொரு அரச நிறுவனத்துக்கும் இச் சுவரொட்டி வழங்கப்படும்.




**05. மொழி மேம்பாட்டு வட்டங்களை உருவாக்குவதற்கான வசதிகளை வழங்குதல்.**

அரசகரும மொழிக் கொள்கை தொடர்பான பாடசாலை மாணவர்களின் அறிவு, மனோநிலை மற்றும் புரிதல்களை விருத்தி செய்வதன் மூலம் இலங்கையில் மும்மொழிகளிலும் அரச சேவையை வழங்குதல் என்ற தொலைநோக்கோடு மொழிமேம்பாட்டு வட்டங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்காலச் சமூகத்தை மும்மொழிச் சமூகமாக மாற்றும் சாத்தியப்பாடுகளை வலுப்படுத்தும் வகையிலும் சகல கட்புல, செவிப்புல மற்றும் வாசிப்புச் சார்ந்த விடயங்களை மும்மொழிகளிலும் நிறைவேற்றிக்கொள்ளும் வகையிலும் மொழிப் பாவனை தொடர்பில் மாணவர்களின் ஆர்வத்தையும் மனோநிலையையும் தூண்டும் முகமாகவே இம் மொழி மேம்பாட்டு வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் வகிபாகத்துடன் கல்வி அமைச்சினால் பாடசாலை மொழி மேம்பாட்டு வட்டங்களை நிறுவுதல் சம்பந்தமாக 01/2015 சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கிறது.
அரசகரும மொழிகள் ஆணைக்குழுவானது நாடளாவியரீதியில் சகல பாடசாலைகளிலும் மொழி மேம்பாட்டு வட்டங்களை அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளது. இச் சுற்றறிக்கையின் பிரகாரம்,

இனங்காணப்பட்ட ஒரு தொகுதி நடவடிக்கைகளை மொழி மேம்பாட்டு வட்டங்களினூடாக மும்மொழிகளிலும் நிறைவேற்றுதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. (எ.கா – பாடசாலைகளுக்குள் காணப்படும் சகல பெயர்ப் பலகைகளையும் மும்மொழிகளிலும் காட்சிப்படுத்துதல், நிகழ்ச்சிகளுக்கான அழைப்பிதழ்களை மும்மொழிகளிலும் தயாரித்தல்.)

இவ் வகையில் மொழி மேம்பாட்டு வட்டங்களை உருவாக்குவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று 2016.10.31 அன்று ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் கொழும்பு மாவட்டத்தில் இனங்காணப்பட்ட (66) அறுபத்துஆறு பாடசாலைகளுக்கும் கண்டி, மாத்தளை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து இனங்காணப்பட்ட பாடசாலைகள் சிலவற்றிற்கும் நடாத்தப்பட்டது.
மேலும் அந் நிகழ்வுகளின் போது பாடசாலை மாணவர்களின் இரண்டாம் மொழியாற்றலை விருத்தி செய்துகொள்ள உதவிகரமான புத்தகத் தொகுதியொன்று ஒவ்வொரு பாடசாலை நூலகத்துக்கும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

பாடசாலை மொழி மேம்பாட்டு வட்டங்கள் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்.







## செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை

## அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் நிதி முன்னேற்றம்




| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| 01 | மொழிக் கணிப்பாய்வுகள் | 600,000 | 660,720 | 110.12% |
| 02 | அரசகரும மொழிக்கொள்கைக்கான முறைப்பாடுகளை விசாரித்தல். | 100,000 | 18,300 | 18.3% |
| 03 | அரசகரும மொழிக்கொள்கை தொடர்பான பொது விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகள் | 2,150,000 | 1,560,540 | 72.58% |
| 04 | மொழி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் | 900,000 | 129,826 | 14.43% |
| 05 | மொழி மேம்பாட்டு வட்டங்களை அமைக்க வழிவகை செய்தல் | 550,000 | 410,965 | 74.72% |
| | **மொத்தம்** | **4,300,000** | **2,780,351** | **64.66%** |

# 06. தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் மற்றும் அதன் முன்னேற்றம்

## 06.தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம்

### அறிமுகம்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் மும் மொழிக் கருத்திட்டத்தினை செயற்படுத்தி முன்னேற்றும் நோக்கில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சின் கீழ் நியதிச் சட்ட நிறுவனமாக 2007 ஆம் ஆண்டின் 26ம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சட்டத்தின் படி தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் அப்படியெனின் 2007 நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து இந் நிறுவனம் அரசியல் அமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருங்கமைப்பு அமைச்சின் விடயத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதோடு நிறுவனம் அந்த அமைச்சு அமைந்திருந்த இலக்கம் 310 காலி வீதி கொழும்பு 03 என்னும் இடத்தில் செயல்பட்டது. 2010 ஏப்ரல் மாதம் 25ம் திகதியில் இருந்து அமைச்சு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சாக பெயர் பெற்றதுடன் இந் நிறுவனமும் அந்த அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டது.

2011 நவம்பர் 15ம் திகதியில் இருந்து நிறுவனத்தின் பிரதான காரியாலயம் 155/A காசல் வீதி கொழும்பு 08 என்னும் இடத்தில் இயங்கியதுடன் 2013 செப்ரெம்பர் 03ம் திகதியில் இருந்து 2015 பெப்ரவரி 28ம் திகதி வரை இரண்டாம் மாடி கட்டிட இலக்கம் 09 பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் கொழும்பு 07 என்னும் நிலையத்தில் இயங்கியது. தற்போது இந் நிறுவனம் இலக்கம் 40 புத்கமுவ வீதி ராஜகிரிய என்னும் இடத்தில் இயங்குகிறது. தற்போது நிறுவனம் தம் பணிக் குழுவினை அதிகரிக்கச் செய்துநிறுவனத்தின் இலக்கினை அடைவதற்காக விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சி பாட நெறிகள் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் கீழ்க் காணும் நிகழ்ச்சித் திட்டங்கள் பிரதானமானவைகளாகும்.

- ❖ சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளுக்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உரிய பாடத் திட்டங்களைத் தயாரித்தல்
- ❖ சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகளில் கற்பித்தல் தொடர்பான பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல்
- ❖ இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி மற்றும் இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய டிப்ளோமா கற்கைநெறியை நடைமுறைப்படுத்தல்.
- ❖ ஆசிரியர் பயிற்சி நிகழ்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் (05 நாட்கள்)
- ❖ வளவாளர்களுக்கான கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தல்.
- ❖ மொழி பெயர்ப்பு தொடர்பான சான்றிதழ் கற்கை நெறி மற்றும் டிப்ளோமா கற்கை நெறியை நடைமுறைப்படுத்தல்.
- ❖ அரச உத்தியோகத்தர்களுக்கான பகுதிநேர இரண்டாம் மொழிப் பயிற்சி கற்கைநெறியை செயற்படுத்தல். (I மட்டம், II மட்டம், III மட்டம் மற்றும் IV மட்டம்)
- ❖ அரச உத்தியோகத்தர்களுக்கான 12 நாட்களை கொண்ட வதிவிட மற்றும் வதிவிடமற்ற குறுகிய கால பயிற்சி கற்கைநெறியை நடைமுறைப்படுத்தல்.
- ❖ ஆங்கில மொழிப் பயிற்சி கற்கைநெறியை நடைமுறைப்படுத்தல்.
- ❖ புதிதாக ஆட் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான குறிப்பிட்ட காலத்தினுள் நடாத்தப்படுகின்ற குறுகிய கால இரண்டாம் மொழிப் பயிற்சி கற்கைநெறியை செயற்படுத்தல் (வைத்தியர்கள்,நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தொழில் சார் உத்தியோகத்தர்களுக்கானது)
- ❖ நாடளாவிய ரீதியில் வானொலி சேவைகள் 08ன் மூலம் மொழிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒலிபரப்பல்.

நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற வதி விடக் கற்கை நெறிகளில் பெரும்பாலானவை அகலவத்தை கலேவத்தையில் அமைந்துள்ள பயிற்சி நிலையத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இரம்மியமான சூழலில் அமைந்துள்ள இந்தப் பயிற்சி நிலையம் பயிற்சியாளர்கள் 250 பேர் ஒரே தடவையில் கலந்து கொள்ளக் கூடிய விரிவுரை மண்டபத்தையும் 30 பேர் கலந்து கொள்ளக் கூடிய விஞ்ஞான கூடத்தையும் 60 பேருக்கு தங்குமிட வசதியையும் வழங்கக் கூடிய விடுதி மற்றும் நூலகத்தையும் உள்ளடக்கியுள்ளது.

மேற் கூறிய கற்கை நெறிகளை நாடளாவிய ரீதியில் நடாத்துவதற்கு தேர்ச்சி அடைந்த வளவாளர் குழுவின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதோடு நிறுவனத்தின் பணிக் குழு அதற்காக மிக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**நோக்கு**

தேசிய மொழிகள் பயிற்சியின் மூலம் இலங்கை வாழ் மக்களிடையே சமாதானம் மற்றும் சக வாழ்வினை மேம்படுத்தல்

**இலக்கு**

அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக மொழிக் கல்வி மற்றும் பயிற்சிக்காக மும் மொழியினை வழங்கும் கேந்திர நிலையமாக செயற்படுத்தல்.

**நோக்கங்கள்**

1. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளைக் கற்பதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு அத்தகைய மொழிகளைக் கற்பிப்பதற்கான சிறந்த ஆசிரியர்களை உருவாக்குதல்.
2. சட்ட எழுத்துருவிலான தேசிய மொழிபெயர்ப்பாளர் சேவை மற்றும் தேசிய உரைபெயர்ப்பாளர் சேவைக்கு நியமனம் செய்யக் கூடிய சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்பாளர்களையும் உரை பெயர்ப்பாளர்களையும் உருவாக்குதல்
3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர்கள் மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் உரை பெயர்ப்பாளர்களுக்கு தரமான பயிற்சிகளை வழங்கக் கூடிய மொழிப் பயிற்றுவிப்பாளர், ஆசிரியர்களை உருவாக்குதல்.
4. பொது மக்களுக்கு வினைத் திறமையான சேவைகளை வழங்குவதற்காக மும் மொழிகளில் ஆற்றல் மிக்க நபர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

**நிறுவனத்தின் கடமைகள்**

- ❖ சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவினைப் பெற்றுக் கொள் எதிர் பார்ப்பவர்களுக்காக அத்தகைய மொழிகளைக் கற்பிப்பதற்கான திறமைமிக்க ஆசிரியர்களை உருவாக்குதலும் அவை பற்றிய ஆழமான பயிற்சிகளை வழங்குதலும்.

- ❖ நிறுவனத்தின் செயற்பாட்டினை வினைத் திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்காக ஆய்வு மற்றும் கல்வியில் சிறந்த பெறு பேற்றினைப் பெறும் நோக்கில் மொழிப் பயிற்சி வழங்குவதில் உள்ள சிக்கல்களை ஆராய்தலும் அது சம்பந்தமாக பரிசீலனை செய்வதும்.

- ❖ தகுதியுடையவர்களுக்கு மொழிப் பயிற்சியும் கல்வியும் வழங்குவதும், அப்பயிற்சி மற்றும் கல்வியினைப் பூர்த்தி செய்யும் சிறந்த விண்ணப்பதாரிகளுக்கு சான்றிதழ்களும் டிப்ளோமாவும் வழங்குதல்.

- ❖ மொழிக் கற்பித்தலைத் தொடர்ந்து செய்வதற்கு பயிற்சி பெற்ற நபர்கள் அடங்கிய குழு ஒன்றினை அமைத்தல்.

❖ மொழிக்குரிய விடயங்கள் தொடர்பான தகவல்கள் சேகரித்து வைக்கும் நிலையம் ஒன்றினை அமைத்தல்.

❖ மொழி பெயர்ப்பாளர்கள் உரை பெயர்ப்பாளர்கள் மற்றும் சுருக்கெழுத்தாளர்கள் ஆகிய விஷேட பிரிவினர்களுக்காக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் விஷேட மொழிப் பயிற்சி பாடநெறியை நடாத்துதல்.

❖ அவசியம் எனக் கருதுமிடத்து சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும் மற்றும் அவற்றிற்கு செய்ய வேண்டிய மாற்றங்கள் சம்பந்தமாக குறித்த அதிகார சபைக்கு சிபார்சினை முன் வைக்க சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் வெளி நாட்டு மொழிகள் சம்பந்தமான மொழி ரீதியிலான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற் கொள்ளல், அவற்றிற்கு ஒத்துழைப்பு நல்குதல் மற்றும் மேம்படுத்தல்.

நிறுவனத்தின் மேலே குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான சகல தீர்மானங்களும் முகாமைத்துவ சபையினால் மேற் கொள்ளப்பட்டதோடு நிறுவனத்தின் கல்வி நடவடிக்கைகளுக்கு கல்விச் சபை சகல வகைகளிலும் ஒத்துழைப்பினை நல்கும். ஆலோசனைச் சபையினால் நிறுவனத்தின் மேம் பாட்டிற்காக மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளின் உச்சப் பயன் சம்பந்தமாக நிறுவனத்திற்கு ஆலோசனை வழங்குவதும் நிறுவனத்திற்குரிய பிரச்சினைகள் மற்றும் நிறுவனத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கும் கலந்துரையாடல் சபை ஒன்றும் காணப்படுகிறது.

## தேசிய மொழிக் கல்வி நிறுவனத்தின் மூலம் 2016ம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட பல வகையான பயிற்சி கற்கைநெறிகளும் நிகழ்ச்சித் திட்டங்களும்

**பாடத்திட்டத்தினை மேம்படுத்தல்**

2016 மே மாதம் 15ம் திகதி பல்கலைக்கழக மற்றும் கல்வி நிறுவனங்களின் கல்விமான்களின் பங்குபற்றுதலோடு அறிவு விருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 24 பேர் கலந்து கொண்டதோடு அதற்காக ரூ160,389 பணம் செலவாகியது. அங்கு எமது நிறுவனத்தின் மூலம் செயற்படுத்த தீர்மானிக்கப்பட்ட இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி மற்றும் இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய டிப்ளோமா கற்கைநெறிக்குரிய பாடத்திட்டம் மற்றும் அதன் அலகுத்தொகுதிகளை தயாரிப்பதற்காக கீழ்க் காணும் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது.

- பேராசிரியர் அசோக்க பிரேமரத்ன அவர்கள் - களனிப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் டபிள்யூ.எம் விஜேரத்ன அவர்கள் - களனிப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் எஸ்.ஜே யோகராஜா அவர்கள் - களனிப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் எம்.கருணாநிதி அவர்கள் - கொழும்புப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் ரத்னசிறி அரங்கல அவர்கள்- ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம

மேற்படி பேராசிரியர் சபைக் கூட்டம் 10னுள் இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறிக்கான குறிப்பிட்ட பாடத்திட்டம் மற்றும் அலகுத்தொகுதிகள் தயாரிக்கப்பட்டதோடு அதற்காக ரூ.190,589 பணம் செலவாகியது. இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய டிப்ளோமா கற்கை நெறிக்கான பாடத்திட்டம் சபைக் கூட்டம் 06னுள் தயாரிக்கப்பட்டதுடன் அதற்கு ரூ.102,111.15 பணம் செலவாகியது. இதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. அதிரதன் அவர்களின் வளவாளர் பங்களிப்பும் பெறப்பட்டது. அதே போன்று இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய சான்றிதழ் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக

பல்கலைக்கழக பேராசிரியர்களின் பங்குபற்றுதலுடன் 03 கூட்டங்கள் நடைபெற்றதோடு அதற்கான செலவு ரூ.45,180 ஆகியது.

**இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி**

சிங்களம்/ தமிழ் கற்பிப்பதற்குத் தேவையான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக ஆரம்ப கட்ட நடவடிக்கையாக 2016ம் வருடத்தில் இந்த நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

2016ம் வருடத்தினுள் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழியில் இரண்டு கற்கைநெறிகளை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டாலும் சிங்கள மொழியில் மாத்திரம் 02 கற்கைநெறிகள் நடாத்தப்பட்டது

**2016ம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி தொடர்பான விபரங்கள்**

| அ/அ | நிலையம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவடைந்த திகதி | பங்குபற்றியோர் | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01. | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.11.01 | 2016.11.16 | 52 | 705,969.83 |
| 02 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.11.27 | 2016.12.16 | 49 | 675,735..93 |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு இக் கற்கைநெறிகள் இரண்டினுள் சிங்கள மொழியில் 101 பேருக்கு பயிற்சி வழங்க முடிந்ததோடு அதற்காக ரூ.1,381,705.76 பணம் செலவாகியது. மேலும் அதற்கான அறிவித்தல் விளம்பரங்களுக்காக ரூ.144,235.17ம் செலவாகியது.

**இரண்டாம் மொழியை கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கைநெறியின் போது**





**ஆசிரியர்களுக்கான கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டம்**

இரண்டாம் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான அறிவு, சிந்தனை மாற்றம் மற்றும் திறமைகளை மேம் படுத்தும் நோக்கத்துடன் இரண்டு நாட்களைக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களாக இந் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2016ம் வருடத்தினுள் கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் 08 நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டதோடு அதற்காக ரூ.1,450,000 பணம் ஒதுக்கப்பட்டது.

**2016ம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்**

| அ/அ | நிலையம் | திகதி | பங்குபற்றியோர் | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.03.27/28 | 66 | 163,532.75 |
| 02 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.06.14/15 | 66 | 134,921.28 |
| 03/04 | தேசிய கல்வியியல் கல்லூர்ரி – புளதிசிபுர – (02 குழுக்கள்) | 2016.07.26/27 | 121 | 229,494.93 |
| 05 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.08.10/11 | 64 | 138,285.00 |
| 06 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.12.29/30 | 43 | 119,851.39 |

மேற்கூறிய அட்டவனையின் படி 2016ம் வருடத்தினுள் ஆசிரியர்களுக்கான கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் 06 நடைபெற்றதோடு அதில் ஆசிரியர்கள் 360 பேர் கலந்து கொண்டனர். இதற்காக ரூ.786,085.35 பணமும் செலவிடப்பட்டது.

**ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்**

நிறுவனத்தினால் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட மொழிப் பயிற்சி கற்கை நெறிகளில் கற்பிப்பதற்கு தகைமை கிடைப்பது 05 நாட்களைக் கொண்ட வதிவிட ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டு அதில் சித்தி பெறும் ஆசிரியர்களுக்கு மாத்திரமே. இந்த ஆசிரியர்கள் இதய பூர்வமாக இணைந்து இரண்டறக் கலந்து பிரதி பலிக்கக் கூடிய கற்பித்தல் முறையை பயன்படுத்தி கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் (Participatory Reflective Heart Holding Teaching Process) இந் நிகழ்ச்சித்திட்டத்தின் சிறப்பம்சமாகும். மேலும் அரசகரும மொழிக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்காக அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி கற்பிப்பதற்கு திறமை மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதும் பொது மக்களுக்கு மொழி தேர்ச்சி வழங்கக் கூடிய ஆசிரியர்கள் குழுவினை உருவாக்குவதும் இந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதன் நோக்கமாகும். இந்த நிகழ்சித் திட்டத்திற்காக கற்கை நெறியில் பங்கு பற்றுபவர்களிடம் பணம் அறவிடப்படுவதுடன் 2016ம் வருடத்தினுள் இப்படியான 04 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதில் ஒரு கற்கை நெறி இலவசமாக நடாத்தப்பட்டது.

**2016ம் வருடத்தினுள் நடாத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சி கற்கை நெறி**

| அ/அ | நிலையம் | திகதி | பங்குபற்றியோர் | செலவு (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.02.08-12 | 44 | 237,605.00 |
| 02 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.03.09-13 | 27 | 135,000.00 |
| 03 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.07.31-08 | 51 | 133,785.00 |
| 04 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.12.19-23 | 69 | 256,360.77 |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 2016ம் வருடத்தினுள் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 04 நடாத்தப்பட்டதோடு அதில் 191 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக ரூ.762,750.77 செலவிடப்பட்டது.

**அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் பகுதி நேர மொழிப் பயிற்சி கற்கைநெறி**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அரச உத்தியோகத்தர்களின் இரு மொழித்திறனை பலப்படுத்துவதற்காக பகுதி நேர மொழிப் பயிற்சி கற்கைநெறி நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் சேவை நிலையங்கள் மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டதுடன் கிழமைக்கு 04 மணித்தியாலமோ அல்லது 06 மணித்தியாலயமோ நிறைவேற்றக் கூடிய வகையிலும் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடைஞ்சல் இல்லாத வகையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. சிங்கள, தமிழ் பகுதி நேர பயிற்சி கற்கை நெறிகள் I, II, III, IV என முறையே 04 மட்டங்களுக்கு பங்கிட்டு வேறுபடுத்தப்பட்டதோடு Iஆம் மட்டம் 250 மணித்தியாலமும், IIஆம் மட்டம் 200 மணித்தியாலயமும், IIIஆம மட்டம் 150 மணித்தியாலயமும் IVஆம் மட்டம் 100 மணித்தியாலமும் நடாத்தப்பட்டது. அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழித் தேர்ச்சி வழங்குவதன் மூலம் அரச சேவையின் வினைத் திறமையினை மேம் படுத்துவதுடன் அரசகரும மொழிக் கொள்கையையும் வினைத் திறமையுடன் நடைமுறைப்படுத்துவதற்கான வசதிகளை செய்வது இந்தப் பாட நெறியின் நோக்கமாகும். அதன் படி 2016ம் வருடத்தில் Iம் மட்ட கற்கைநெறி 10ம், IIம் மட்ட கற்கைநெறி 61ம், IIIம் மட்ட கற்கை நெறி 60ம், IVம் மட்ட கற்கைநெறி 13ம் நடாத்த திட்டமிடப்பட்டதோடு அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணம் ரூபா. 11,436,000 ஆகும்

**2016ம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதி நேர மொழிப் பயிற்சி பாட நெறி**

| மட்டம் | சிங்கள மொழி கற்கை நெறிகளின் எண்ணிக்கை | கற்கை நெறிகளின் எண்ணிக்கை | மட்டம் | தமிழ் மொழி கற்கை நெறி எண்ணிக்கை | கற்கை நெறிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| Iம் மட்டம் | 03 | 117 | Iம் மட்டம் | 05 | 146 |
| IIம் மட்டம் | 12 | 440 | IIம் மட்டம் | 47 | 2075 |
| IIIம் மட்டம் | 10 | 424 | IIIம் மட்டம் | 49 | 1690 |
| IVம் மட்டம் | - | - | IVம் மட்டம் | 13 | 555 |
| **மொத்தம்** | **25** | **981** | **மொத்தம்** | **114** | **4496** |

மேற்காட்டப்பட்ட அட்டவனையின் படி 2016ம் வருடத்தினுள் கற்கை நெறி 139னுள் அரச உத்தியோகத்தர்கள் 5447 பேருக்கு மொழிப் பயிற்சி வழங்கப்பட்டதோடு, அதற்காக ரூ.9,496,300 பணம் செலவிடப்பட்டது.

**12 நாட்களைக் கொண்ட வதிவிடம் அற்ற சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி பயிற்சி நெறி**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பகுதி நேர பயிற்சி கற்கைநெறிகளில் பங்கு பற்ற முடியாத அரச உத்தியோகத்தர்களுக்காக 12 நாட்களைக் கொண்ட குறுகிய கால பயிற்சி கற்கை நெறி ஏற்பாடு செய்யப்பட்டது. கலாச்சார மற்றும் சமூக ஒருங்கிணைப்பினை உத்தேசித்து மனிதாபிமான சக வாழ்வுடன் கூடிய அரச உத்தியோகத்தர்களை உருவாக்க நிறுவனம் எடுக்கும் மிகப் பாரிய முயற்சியாக இந்த 12 நாட்களைக் கொண்ட குறுகிய கால மொழிப் பயிற்சி கற்கைநெறியினைக் கொள்ளலாம். இந்த கற்கை நெறியினைப் பயிலும் உத்தியோகத்தர்கள் 12 நாட்கள் தொடர்ச்சியாகச் சமூகமளிக்க வேண்டுமென்பதுடன்

கற்கைநெறியின் இறுதியில் நடாத்தப்படும் முறைமையான எழுத்து மற்றும் வாய் மொழிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

அதன் படி 2016ம் வருடத்தினுள் 12 நாட்களைக் கொண்ட வதி விடம் அற்ற கற்கை நெறிகள் 24ஐ நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டதோடு அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் ரூ.3,273,600 ஆகும். இதில் 03 நிகழ்ச்சித் திட்டங்கள் விஷேட கோரிக்கைகளின் பேரில் பொது மக்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது.

**2016ம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட 12 நாட்களைக் கொண்ட வதி விடம் அற்ற கற்கைநெறிகள்**

| அ/அ | நிலையம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவடைந்த திகதி | மொழி | பங்குபற்றியோர் | செலவு ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | தமன்கடுவ பி.செ. காரியாலயம் | 2016.07.12 | 2016.07.25 | தமிழ் | 51 | 121,464.76 |
| 02 | பொலன்னறுவ பொது வைத்தியசாலை | 2016.07.13 | 2016.07.25 | தமிழ் | 87 | 129,748.05 |
| 03 | திம்புலாகல பி.செ. காரியாலயம் | 2016.07.14 | 2016.07.27 | தமிழ் | 32 | 101,073.11 |
| 04 | கேகாலை பி.செ. காரியாலயம் | 2016.11.01 | 2016.11.17 | தமிழ் | 73 | 112,166.41 |
| 05 | ருவன்வெல்ல பி.செ. காரியாலயம் | 2016.11.17 | 2016.11.28 | தமிழ் | 114 | 110,536.41 |
| 06 | தவளம பி.செ. காரியாலயம் | 2016.11.15 | 2016.12.22 | தமிழ் | 57 | 103,892.20 |
| 07 | எல்பிட்டிய பி.செ. காரியாலயம் | 2016.11.22 | 2016.12.19 | தமிழ் | 48 | 94,452.20 |
| 08 | பதுளை மா.செ. காரியாலயம் | 2016.11.11 | 2016.11.24 | தமிழ் | 105 | 118,822.20 |
| 09 | மாத்தறை சகவாழ்வு மன்றம் | 2016.11.17 | 2016.12.01 | தமிழ் | 72 | 110,752.20 |
| 10 | அதுரலிய பி.செ. காரியாலயம் | 2016.11.15 | 2016.11.30 | தமிழ் | 38 | 92,185.20 |
| 11 | கம்பளை பி.செ. காரியாலயம் | 2016.11.15 | 2016.11.27 | தமிழ் | 77 | 97,581.83 |
| 12 | ஆராச்சிக்கட்டு பி.செ. காரியாலயம் | 2016.11.18 | 2016.11.29 | தமிழ் | 106 | 120,308.74 |
| 13 | குருநாகல் பி.செ. காரியாலயம் | 2016.11.05 | 2016.11.16 | தமிழ் | 92 | 97,412.20 |
| 14 | கம்பஹா பி.செ. காரியாலயம் | 2016.11.15 | 2016.11.27 | தமிழ் | 85 | 118.,085.00 |
| 15 | நொச்சியாகம பி.செ. காரியாலயம் | 2016.11.03 | 2016.11.14 | தமிழ் | 68 | 116,324.91 |
| 16 | கெப்பிட்டிகொல்லாவ பி.செ. காரியாலயம் | 2016.11.07 | 2016.11.18 | தமிழ் | 84 | 118,474.91 |
| 17 | வெளிகந்த பி.செ. காரியாலயம் | 2016.12.02 | 2016.12.12 | தமிழ் | 67 | 108,579.60 |
| 18 | தமன்கடுவ பி.செ. காரியாலயம் | 2016.12.03 | 2016.12.14 | தமிழ் | 115 | 134,859.60 |
| 19 | உக்குவளை பி.செ. காரியாலயம் | 2016.12.21 | 2016.12.08 | தமிழ் | 110 | 96,927.20 |
| 20 | மொனராகலை மா.செ. காரியாலயம் | 2016.12.01 | 2016.12.12 | தமிழ் | 54 | 109,212.20 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21 | இரத்தினபுரி பி.செ. காரியாலயம் | 2016.12.08 | 2016.12.22 | தமிழ் | 57 | 121,408.86 |
| 22 | களணி பி.செ. காரியாலயம் | 2016.12.05 | 2016.12.16 | தமிழ் | 26 | 53,427.22 |
| 23 | பொது மக்களுக்கான சிங்கள மொழி பயிற்சிக் கற்கைநெறி | 2016.12.14 | 2016.12.25 | சிங்களம் | 79 | 122,197.80 |
| 24 | பொது மக்களுக்கான ஆங்கில மொழி பயிற்சிக் கற்கைநெறி | 2016.12.15 | 2016.12.27 | ஆங்கிலம் | 64 | 116,797.80 |
| 25 | பொது மக்களுக்கான தமிழ் மொழி பயிற்சிக் கற்கைநெறி | 2016.12.19 | 2016.12.30 | தமிழ் | 39 | 73,770.00 |

மேற் கூறிய அட்டவனைக்கு ஏற்ப 2016ம் வருடத்தினுள் 12 நாட்களைக்கொண்ட வதி விடம் அற்ற மொழிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் 22னுள் அரச உத்தியோகத்தர்கள் 1618 பேருக்கு மொழிப் பயிற்சி வழங்குவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதுடன் அதற்காக ரூ.2,387,695.01 பணம் செலவிடப்பட்டது. அதே போன்று பொது மக்களுக்காக நடைமுறைப்படத்தப்பட்ட மொழிப் பாட நெறிகள் 03ன் மூலம் 182 பேருக்கு மொழிப் பயிற்சி வழங்கப்பட்டதோடு அதற்குச் செலவான பணம் ரூ.312,765.60 ஆகும்.

### தெரிந்தால் கற்பியுங்கள் தெரியா விட்டால் கற்றுக்கொள்ளுங்கள் சிங்களம், தமிழ் கற்பித்தல் வானொலி நிகழ்ச்சித் திட்டம்

சிங்கள தமிழ் மொழி அறிவினை மேம் படுத்துவதற்காக 2016ம் வருடத்தில் இந் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிங்கள சேவை, தமிழ் சேவை, றுகுனு, ரஜரட்டை, கண்டி, பலாலி, பிறை மற்றும் வயம்ப என்னும் பிரதேச சேவைகள் 08 மூலம் ஒலி பரப்பப்பட்டது. 2016ம் வருடத்தினுள் இதற்காக ரூ.5,036,100/= ஒதுக்கப்பட்டுள்ளதோடு 2016 ஆம் வருடத்தில் ரூ.5,327,730.31 பணமும் செலவாகியுள்ளது.

### அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட அறிவினை புதுப்பிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

ஜனாதிபதி உத்தியோகபூர்வ நடமாடும் சேவையோடு இணைந்த வட மத்திய மாகாணத்தனுள் வாழும் அரச உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழி அறிவு மேம் பாட்டுக்காக இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படத்தப்பட்டது. 2016ம் வருடத்தினுள் இவ்வாறான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டதோடு அதற்காக ரூ.108,519.39 பணம் செலவாகியுள்ளதோடு நிறுவனத்தின் உழைப்பின் மூலம் இச் செலவு செய்யப்பட்டது.

### 2016ம் வருடத்தினுள் அரச உத்தியோகத்தர்களுக்காக நடைமுறைப்படத்தப்பட்ட அறிவைப் புதுப்பிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள்

| அ/அ | நிலையம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவடைந்த திகதி | பங்குபற்றி யோர் | செலவு ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | பிரதீபா மண்டபம் மன்னம்பிட்டிய (தம்பன்கடுவ பி.செ.கா) | 2016.07.22 | 2016.07.23 | 275 | 108,519.39 |

**இரண்டாம் மொழி முகாம்**

ஜனாதிபதி உத்தியோகபூர்வ நடமாடும் சேவையோடு இணைந்ததாக பாடசாலை மாணவ மாணவிகளின் இரண்டாம் மொழி அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் ஒரு நாள் நிகழ்ச்சித் திட்டமாக இந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டது. இதற்காக ரூ.97,977.44 நிறுவனத்தின் உழைப்பின் மூலம் கிடைத்த பணம் செலவிடப்பட்டது.

**2016ம் வருடத்தினுள் நடை முறைப்படுத்தப்பட்ட இரண்டாம் மொழி முகாம்**

| அ/அ | நிலையம் | திகதி | பங்குபற்றியோர் | செலவு ரூபா |
|---|---|---|---|---|
| 01 | தேசிய கல்வியல் கல்லூரி புளத்திசிபுர | 2016.07.28 | 154 | 97,974.44 |

**வைத்திய உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படுகின்ற 150 மணித்தியாலங்களைக் கொண்ட வதிவிட சிங்கள/தமிழ் மொழிப் பயிற்சி கற்கைநெறிகள்**

வைத்திய தொழிலில் புதிய நியமனம் பெறும் வைத்திய உத்தியோகத்தர்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட காலத்தினுள் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 11 நாட்கள் முழுவதும் வதி விடத்துடன் இப் பயிற்சி வழங்கப்பட்டதுடன் அந்த கற்கை நெறியில் சித்தி பெறும் உத்தியோகத்தர்கள் மொழித் தேர்ச்சி பரீட்சையில் விடுவிக்கப்படுவர்.

**2016ம் வருடத்தினுள் வைத்திய உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட கற்கை நெறிகள்**

| அ/அ | நிலையம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவடைந்த திகதி | பங்கு பற்றியோர் | செலவு ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.01.12 | 2016.01.22 | 58 | 545,355.14 |
| 02 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.01.25 | 2016.02.04 | 88 | 827,435.59 |
| 03 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.03.29 | 2016.04.08 | 85 | 799,227.36 |
| 04 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.08.14 | 2016.08.24 | 81 | 753,216.51 |
| 05 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.09.01 | 2016.09.11 | 87 | 802,126.19 |
| 06 | பயிற்சி நிலையம் அகலவத்தை | 2016.09.14 | 2016.09.24 | 88 | 827,435.39 |

2016ம் வருடத்தினுள் இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் 06 நடைபெற்றதோடு வைத்தியர்கள் 487 பேருக்கு இரண்டாம் மொழிப் பயிற்சி வழங்கப்பட்டது. இதற்காக ரூ.4,554,7967.18 பணம் செலவிடப்பட்டது.





**நிறுவனத்தின் பணிக்குழுவுக்காக நடாத்தப்பட்ட பயிற்சி மற்றும் உதவி நிகழ்ச்சித் திட்டம்**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பணிக் குழுவின் அறிவாற்றலை மேம் படுத்துவதற்காக நிறுவனத்தினால் பல் வகையான நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்காக சந்தர்ப்பம் கிடைக்கும் நிலைமைகளில் பிற நிறுவனங்களில் நடைபெறும் பயிற்சிகளில் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தப் பயிற்சித் திட்டத்தினால் பணிக் குழுவுக்கு வழி காட்டலைப் போன்றே தோற்றப் பொழிவினை வளர்ப்பதற்கும் தேவையான உதவிகளையும் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு இதற்காக 2016ம் வருடத்தினுள் ரூ.500,000 பணம் ஒதுக்கப்பட்டதோடு அவ்வருடத்தினுள் ரூ.249,600 பணம் செலவிடப்பட்டது.

**2016ம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக சாரம்சம்**

| அ/அ | நிகழ்ச்சித் திட்டங்கள் | பௌதீக ரீதியில் முடிவடைந்தது | |
|---|---|---|---|
| | | நிகழ்ச்சி திட்டகளின் எண்ணிக்கை | முடிவடைந்தது |
| 01 | பாடத் திட்ட அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் அமர்வுகள் | 02 | 24 |
| 02 | இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கை நெறிக்கான பாடத்திட்டம் தயாரித்தல் | 10 | பாடத் திட்டம்- 01<br>அலகுத்தொகுதிகள்-04 |
| 03 | இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய டிப்ளோமா கற்கை நெறிக்கான பாடத்திட்டம் தயாரித்தல் | 06 | பாடத் திட்டம் - 01 |
| 04 | இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கை நெறி | 02 | 101 |
| 05 | கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்/ஆசிரியர்களுக்கான மீள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 06 | 360 |
| 06 | ஆசிரியர் பயிற்சி கற்கைநெறி (05 நாட்கள்) | 04 | 191 |
| 07 | அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பகுதி நேர மொழிப்பயிற்சி கற்கைநெறி (சிங்களம்/ தமிழ்) | | |
| | Iம் மட்டம் | 1459 மணி | 555 மணி |
| | IIம் மட்டம் | 9319.5 மணி | 2114 மணி |
| | IIIம் மட்டம் | 7644.6 மணி | 2515 மணி |
| | IVம் மட்டம் | 1299 மணி | 263 மணி |
| 08 | அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட 12 நாட்களைக்கொண்ட வதி விடம் அற்ற மொழி பயிற்சி கற்கைநெறி | 25 | 1800 |
| 09 | வானொலி நிகழ்ச்சித் திட்டம் | 35 | 35 |
| 10 | அரச உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழி அறிவை புதிப்பிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 01 | 275 |
| 11 | பாடசாலை மாணவ மாணவிகளுக்கு நடாத்தப்பட்ட மொழி முகாம் | 01 | 154 |
| 12 | பணிக்குழு பயிற்சித் திட்டம் | 16 | - |
| 13 | வைத்திய உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட 150 மணித்தியாலங்களைக் கொண்ட வதி விட சிங்கள/தமிழ் மொழிப் பயிற்சி கற்கைநெறி | 06 | 487 |

**2016ம் வருடத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் நிதி சாராம்சம்**

| அ/அ | நிகழ்ச்சித் திட்டம் | நிதி முன்னேற்றம் | |
|---|---|---|---|
| | | **நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **செலவு ரூபா** |
| 01 | பாடத் திட்ட அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் அமர்வுகள் | 02 | 257,658.00 |
| 02 | இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கை நெறிக்கான பாடத்திட்டம் தயாரித்தல் | 10 | 138,500.00 |
| 03 | இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய டிப்ளோமா கற்கை நெறிக்கான பாடத்திட்டம் தயாரித்தல் | 06 | 102,116.65 |
| 04 | இரண்டாம் மொழி கற்பித்தல் பற்றிய சான்றிதழ் கற்கை நெறி | 02 | 1,525,940.93 |
| 05 | கண்காணிப்பு மற்றும் பின்னூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்/ஆசிரியர்களுக்கான மீள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 06 | 786,085.35 |
| 06 | ஆசிரியர் பயிற்சி கற்கைநெறி (05 நாட்கள்) | 04 | 762,750.77 |
| 07 | அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட பகுதி நேர மொழிப்பயிற்சி கற்கைநெறி (சிங்களம்/ தமிழ்) | | |
| | Iம் மட்டம் | 1459 மணி | 989,500.00 |
| | IIம் மட்டம் | 9319.5 மணி | 4,759,100.00 |
| | IIIம் மட்டம் | 7644.6 மணி | 3,199,100.00 |
| | IVம் மட்டம் | 1299 மணி | 548,600.00 |
| 08 | அரச உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட 12 நாட்களைக்கொண்ட வதி விடம் அற்ற மொழி பயிற்சி கற்கைநெறி | 25 | 2,700,460.61 |
| 09 | வானொலி நிகழ்ச்சித் திட்டம் | 36 | 5,327,730.31 |
| 10 | அரச உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழி அறிவை புதிப்பிக்கும் நிகழ்ச்சித் திட்டம் | 01 | 108,519.39 |
| 11 | பாடசாலை மாணவ மாணவிகளுக்கு நடாத்தப்பட்ட மொழி முகாம் | 01 | 97,977.44 |
| 12 | பணிக்குழு பயிற்சித் திட்டம் | 16 | 249,600.00 |
| 13 | வைத்திய உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட்ட 150 மணித்தியாலங்களைக் கொண்ட வதி விட சிங்கள/தமிழ் மொழிப் பயிற்சி கற்கைநெறி | 06 | 4,554,795.90 |
| 14 | உட்கட்டுமானத்திற்கான அபிவிருத்தி | – | 12,000,000.00 |
| 15 | காரியாலய உபகரணங்கள் கொளவனவு | – | 2,053,100.00 |
| | **மொத்தம்** | | **40,161,535.35** |

**செயற்திட்டத்தின் படியான செயலாற்றுகை**

**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் நிதி முன்னேற்றம்**




| தொ /இல | விபரம் | உத்தேசிக்கப்பட்ட தொகை (ரூபா) | உண்மைச் செலவு (ரூபா) | வீதம் |
|---|---|---|---|---|
| 01 | திட்டமிடல் அமர்வுகளை நடாத்தல் | 310,000 | 257,658 | 83.11% |
| 02 | பாடத்திட்டத்தினை மேம்படுத்தல் | 600,000 | 379,117 | 63.19% |
| 03 | ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் | 4,250,000 | 2,568,387 | 60.43% |
| 04 | ஆசிரியர்களுக்கான மொழி பயிற்சி நிகழ்ச்சிகள | 19,745,700 | 17,524,490 | 85.87% |
| 05 | மூலதன சொத்துக்களை கையகப்படுத்தல் | 14,594,300 | 14,053,100 | 96.29% |
| 06 | பணிகுழுவினருக்கான கொள்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் | 500,000 | 249,600 | 49.92% |
| | **மொத்தம்** | **40,000,000** | **35,032,352** | **87.58%** |

# 07.அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் மற்றும் அதன் முன்னேற்றம்

## 07. அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம்

**பணிநோக்கு**

அரச சார்பற்ற நிறுவனங்களின் வளங்கள் மற்றும் செயற்பாடுகளை அரச கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதனூடாக அவற்றை நாட்டின் அபிவிருத்தியில் பங்காளர்களாக்குதல்.

**குறிக்கோள்கள்**

- பதிவு செய்யப்பட்டுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைக்கும் வளங்களை நாட்டின் சட்ட மற்றும் கொள்கை சட்டகத்திற்கு உட்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு நல்வாழ்கைக்காக பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்தல்.

- பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உதவுதல் மற்றும் அபிவிருத்தி செயன்முறைக்கு தன்னார்வ பங்குபற்றலுக்காக தேசிய மற்றும் சர்வதேச சிவில் சமூகங்களுக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தல்.

**மூலோபாயம்**

அரச தலையீடு மற்றும் மேற்பார்வையின் கீழ் பயனாளிக்கு சேவைகளை வழங்குவற்கு அரச சார்பற்ற நிறுவனங்களை பதிலீட்டு சேவை வழங்குனர்களாக ஏற்றுக் கொள்ளுதல்.

**அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் பிரதான பிரிவுகள்**

மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் அனைத்து நடவடிக்கைகளும் கீழ்வரும் பிரிவுகளின் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

1. அரச சார்பற்ற நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் ஆராய்தல் பிரிவு
2. அரச சார்பற்ற நிறுவனங்களின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வுப் பிரிவு
3. வசதிகள் மற்றும் சேவை வழங்கும் பிரிவு
4. நிருவாகப் பிரிவு
5. நுண் நிதிப் பிரிவு

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகத்தின் இணையத்தள முகவரி *www.ngosecretariat.gov.lk* ஆகும். அதனூடாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பதிவு மற்றும் மேற்பார்வை, சட்டத் தகவல்கள், சமகால செய்திகள், விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவை பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

# 08. அமைச்சின் கீழுள்ள வெளிநாட்டு நிதியுதவித் திட்டங்கள் மற்றும் அவைகளின் முன்னேற்றம்

## 8.1 சமூக ஒத்திசைவு மற்றும் நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்னெடுப்புக்கள் (FLICT)

### அறிமுகம்

ஜேர்மனிய கூட்டாட்சியின் பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி அமைச்சின் சார்பாக ஜேர்மனிய அபிவிருத்தி ஒத்துழைப்பு நிறுவனம் (GIZ) இலங்கையின் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சுடன் இணைந்து அமுலாக்கும் நிகழ்ச்சித்திட்டமே சமூக ஒத்திசைவு மற்றும் நிலைமாற்றத்திற்கான உள்ளூர் முன்னெடுப்புகள் கருத்திட்டத்தினூடாக ஆகும். கருத்திட்டத்தின் பங்காளர் அமைச்சாக தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு செயற்படுகிறது. அரச மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் சமூக ஒருமைப்பாடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய பிரஜைகள் பங்குபற்றலை அதிகரித்தல் ஆகியவற்றுக்கு தேவையான ஒத்துழைப்பை வழங்கி, FLICT இலங்கை அரசாங்கத்துக்கு உதவி வருகிறது.

**தேசிய மட்டத்தில்** : தேசிய கலந்துரையாடல்கள் பற்றிய அமைச்சு மற்றும் உள்ளூராட்சிகள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு ஆகியவற்றுடன் FLICT பணியாற்றுகிறது.

**உள்ளூர் மட்டத்தில்:** தெரிவு செய்யப்பட்ட சமூதாயஞ்சார் நிறுவனங்களுடன் இணைந்து பணிகளை மேற்கொள்ளும் அதே நேரம் மாகாண சபை, மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைந்து அம்பாறை, பதுளை, காலி, முல்லைத்தீவு மற்றும் புத்தளம் ஆகிய ஐந்து முன்னோடி மாவட்டங்களில் FLICT தனது பணிகளை மேற்கொள்கிறது.

2014 ஜனவரியில், புதியதும் இறுதியானதுமான கட்டத்தை ஆரம்பித்துள்ளதுடன் 2017 மார்ச்சில் அது முடிவுறும். இந்த கட்டத்தின் நோக்கம்: “முக்கிய அரச மற்றும் அரசு சார துறையினர் இணைந்து சமூக ஒருமைப்பாட்டின் முக்கிய கூறுகளை வெற்றிகரமாக பிரயோகிப்பதாகும்.” இதனூடாக எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்:

- சமூக ஒருமைப்பாட்டு அறிவை அதிகரித்தல்
- முக்கிய அரச மற்றும் அரசு சாரா துறையினரின் கொள்திறனை விருத்தி செய்தல்.
- உள்ளூர் தேவைகளை அடிப்படையாக கொண்டு சமூக ஒருமைப்பாட்டுக்கு பங்களித்த முன்னெடுப்புகள் மீள செயற்படுத்த திடமாக்குதல்.

**இந்த பெறுபேறுகளை அடைய, நான்கு பணித் துறைகளில் FLICT தன்னை ஒழுங்கமைத்துள்ளது. அவையாவன:**

- தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் சமூக ஒருமைப்பாட்டு தேசிய கொள்கைச் சட்டத்தை அமுலாக்குதல்.
- உள்ளூர் மற்றும் சமூக மட்டத்தில் சமூக ஒருமைப்பாட்டு தேசிய கொள்கைச் சட்டகத்தை அமுலாக்குதல்.
- கலை மற்றும் கலாசாரத்தினூடாக சமூக ஒருமைப்பாட்டை மேம்படுத்தல்.
- கொள்திறன் விருத்தி, கற்றல் மற்றும் புத்தாக்கம்.

## 8.2. சட்டத்தை பலப்படுத்தல், நீதி நியாயத்துக்கான அணுகு வழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டை வலுப்படுத்தல் கருத்திட்டம் (SELAJSI)

### அறிமுகம்

முன்னதாக அமுல்படுத்தப்பட்ட நீதிநியாயத்தை சமமான அணுகுதல்'' கருத்திட்டத்தில் 1ஆம் மற்றும் 2ஆம் கட்டங்கள் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவங்களை அடிப்படையாக சட்டத்தினை பலப்படுத்தல், நீதி நியாயத்துக்கான அணுகுவழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டை வலுப்படுத்தல் கருத்திட்டம் உருவாக்கப்பட்டது. குறிப்பாக சட்ட உதவி, சிறைச்சாலை நிருவாகம் மற்றும் ஆவண அணுகுதல் ஆகிய சேவை வழங்குதல் முறைமையை மேம்படுத்தும் நோக்குடன், அதற்கு இயைபான பிரதேச மட்ட பணிகள் மற்றும் பொறிமுறைகளுக்கு வசதியளித்தல் நீதி நியாயத்துக்கான சமமான அணுகுதல் கருத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. இந் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நீதி நியாயத்துக்கான நிறுவனங்களுக்கிடையில் அதிக ஒருங்கிணைப்பு அணுகுமுறையுடன் முறைசாரா பொறிமுறையை தாபித்துள்ளது.

இந்த நேர்கணிய பெறுபேறுகளை தளமாக கொண்டு, அதிக பலமிக்க நீதி நியாயத்திற்கான மறுசீரமைப்புக்காக காரணியாகும் வகையில், இந்த ஒருங்கிணைப்பு கூறுகளின சிலவற்றை பொறிமுறையாக்கி அதனை மேம்படுத்தி சட்டத்தை வலுப்படுத்தல், நீதி நியாயத்துக்கான அணுகு வழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டை வலுப்படுத்தல் கருத்திட்டம் (SELAJSI) கட்டியெழுப்பும். குறித்த துறைகளில் காணப்படும் நிருவன திட்டமிடல் இயலளவை வலுப்படுத்துவதனூடக **கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் (LLRC) பரிந்துரைகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டிற்கான தேசிய கொள்கைச் சட்டகம்** என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரச கொள்திறனுக்கு உதவுவதற்கு இந் நிகழ்ச்சித்திட்டம் முக்கிய அவதானத்தை கொண்டுள்ளது.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு, நீதி அமைச்சு அத்துடன் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் அலுவல்கள் அமைச்சு ஆகியன இந் நிகழ்ச்சித்திட்டத்தை தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்துகின்றன.

**08.02.01) கலந்துரையாடல், சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் நோக்குடன்கூடிய கொள்கை உருவாக்கம் மற்றும் கொள்கை நடைமுறையாக்கம் என்பவற்றுக்கு தேசிய நிறுவனங்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் (அரசு மற்றும் சிவில்) பலமான இயலளவை கொண்டுள்ளனர்.**

- அடையாளம் காணப்பட்ட இலகுவில் பாதிப்படையக்கூடிய குழுக்களுக்கு சட்ட ஆவனங்களை வழங்குவதற்காக நடமாடும் சேவைகளை நடாத்தல்.
- அகலவத்தையில் உள்ள தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவகம் மற்றும் கொழும்பில் உள்ள அரசகரும மொழிகள் திணைக்களம் ஆகியவற்றில் இரண்டு மொழி ஆய்வு கூடங்கள் அமைக்கப்பட்டன.
- சுகாதார துறை, (வைத்தியசாலைகள்), பொலிஸ், உள்ளூர் அரசாங்க நிறுவனங்கள் (பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள அரச நிறுவனங்கள்) என்பவற்றை இலக்காக கொண்டு 54 பிரதேச செயலகங்களில் மொழி மதிப்பீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

**08.02.02) சமூக ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகளில் பங்குகொள்ளும் சிறந்த விழிப்புணர்வை பெற்றுள்ள பொது மக்கள், குறிப்பாக இளைஞர்கள் மற்றும் பெண்கள்**

- சகவாழ்வை மேம்படுத்துவதற்காக எண்ணிக்கையில் குறைவான சிறு சமூகக் குழுக்கள் தொடர்பாக 2014ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நாற்காட்டிக்காக மேற்கொள்ளப்பட்ட தாக்க மதிப்பீட்டு செயற்பாட்டின் முடிவுகளை மையமாக கொண்டு எண்ணிக்கையில் குறைவான இனக் குழுக்கள் தொடர்பாக பொது மக்களையும் பாடசாலை மாணவர்களையும் கூர்வுணர்வுநிலைப்படுத்தல்.

- பல்கலைக்கழகங்களுக்கிடையிலான செயற்பாடுகள் (வீதி நாடக போட்டிகள், பரிமாற்றம் மற்றும் விவாதப் போட்டிகள் மற்றும் இன்னபிற) மூலம் பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் சகவாழ்வை மேம்படுத்த இடைவினை மற்றும் புரிந்துணர்வுக்கு உதவுதல்.

- நிலைபெற்றுள்ள ‘‘மொழிச் சங்கங்கள்’’ ‘‘சகவாழ்வுச் சங்கங்களாக’’ பணிகளைச் செய்ய வலுப்படுத்த மற்றும் இயக்கப்படுத்துவதற்கு உதவுதல்.

- வலுப்பெற்ற பெண்கள் தலைவர்களுடன் தொடர்ச்சியான உறவினை உறுதிப்படுத்தல்.

- ‘‘சமூக இசைவுத்தன்மை மற்றும் நிலைமாற்றத்திற்காக மாற்றத்தினை செய்யக்கூடிய முகவர்களாக இளைஞர்கள்’’ நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பாக மீளாய்வு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

- ‘‘சகவாழ்வுக்காக மாற்றத்திற்கான முகவர்களாக இளம் ஊடகவியளாளர்கள்’’ நிகழ்ச்சித்திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் இயலுமான சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக அவர்களிடத்தில் கலந்துரையாடலை விரிவுப்படுத்தல்.

# 09. நாணய ஒதுக்கீடு

# 2016.12.31 வரையான நிதி முன்னேற்றம்

தலைப்பு - தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரசகரும மொழிகள் 157

நிகழ்ச்சித்திட்டம் - 01 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கருத்திட்ட எண் மற்றும் பெயர் - 01 அமைச்சரின் அலுவலக நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள்

| விபரம் | நிகர வழங்கள் நிறைவு | செலவு | இருப்பு |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவீனம்** | **24,659,354.00** | **20,714,334.66** | **3,945,019.34** |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 13,100,000.00 | 12,845,457.20 | 254,542.80 |
| போக்குவரத்து செலவு | 1,000,000.00 | 437,292.50 | 562,707.50 |
| வழங்குதல் | 4,418,160.00 | 4,028,787.76 | 389,372.24 |
| பராமரிப்புச்செலவு | 2,373,429.00 | 1,913,520.39 | 459,908.61 |
| சேவைகள் | 3,767,765.00 | 1,489,276.81 | 2,278,488.19 |
| **மூலதனச் செலவு** | **3,500,000.00** | **2,980,883.52** | **519,116.48** |
| மூலதனச் சொத்துக்களில் புனர்வாழ்வு | 2,000,000.00 | 1,548,088.98 | 451,911.02 |
| மூலதனச் சொத்துக்களை வாங்குதல் | 1,500,000.00 | 1,432,794.54 | 67,205.46 |
| **மொத்தம்** | **28,159,354.00** | **23,695,218.18** | **4,464,135.82** |

தலைப்பு - தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு 157

நிகழ்ச்சித்திட்டம் - 01 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கருத்திட்ட எண் மற்றும் பெயர் - 02 நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள்

| விபரம் | நிகர வழங்கள் நிறைவு | செலவு | இருப்பு |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவீனம்** | **188,747,574.00** | **179,811,184.98** | **8,936,389.02** |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 58,215,000.00 | 56,006,149.64 | 2,208,850.36 |
| போக்குவரத்து செலவு | 1,696,800.00 | 1,395,395.25 | 301,404.75 |
| வழங்குதல் | 4,347,194.00 | 4,339,609.33 | 7,584.67 |
| பராமரிப்புச்செலவு | 6,200,000.00 | 6,114,251.79 | 85,748.21 |
| சேவைகள் | 42,588,580.00 | 41,559,462.28 | 1,029,117.72 |
| இடமாற்றம் | 75,700,000.00 | 70,396,316.69 | 5,303,683.31 |
| **மூலதனச் செலவு** | **62,538,597.00** | **58,355,965.94** | **4,182,631.06** |
| மூலதனச் சொத்துக்களில் புனர்வாழ்வு | 2,100,000.00 | 1,762,696.96 | 337,303.04 |
| மூலதனச் சொத்துக்களை வாங்குதல் | 1,621,327.00 | 1,620,554.59 | 772.41 |
| கொள்திறன் விருத்தி | 300,000.00 | 275,129.00 | 24,871.00 |
| இடமாற்றம் | 58,517,270.00 | 54,697,585.39 | 3,819,684.61 |
| **மொத்தம்** | **251,286,171.00** | **238,167,150.92** | **13,119,020.08** |

தலைப்பு - தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு 157

நிகழ்ச்சித்திட்டம் - 01 செயற்பாட்டு நடவடிக்கைகள்

கருத்திட்ட எண் மற்றும் பெயர் - 03 நிர்வாகம் மற்றும் தாபன சேவைகள

| விபரம் | நிகர வழங்கள் நிறைவு | செலவு | இருப்பு |
|---|---|---|---|
| **மீண்டெழும் செலவீனம்** | **148,555,226.00** | **126,865,813.38** | **21,689,412.62** |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 137,600,000.00 | 118,693,237.00 | 18,906,763.00 |
| போக்குவரத்து செலவு | 4,300,000.00 | 3,604,675.89 | 695,324.11 |
| வழங்குதல் | 1,896,000.00 | 1,352,974.01 | 543,025,99 |
| பராமரிப்புச்செலவு | 800,000.00 | 473,515.02 | 326,484.98 |
| சேவைகள் | 3,259,226.00 | 2,148,009.17 | 1,111,216.83 |
| இடமாற்றம் | 700,000 | 593,402.29 | 106,597.71 |
| **மூலதனச் செலவு** | **142,974,504.00** | **63,378,430.72** | **79,596,073.28** |
| மூலதனச் சொத்துக்களில் புனர்வாழ்வு | 900,000.00 | - | 900,000.00 |
| மூலதனச் சொத்துக்களை வாங்குதல் | 1,478,673.00 | 1,010,365.97 | 468,307.03 |
| கொள்திறன் விருத்தி | 700,000.00 | 630,348.45 | 69,651.55 |
| இடமாற்றம் | 139,895,831.00 | 61,737,716.30 | 78,158,114.70 |
| **மொத்தம்** | **291,529,730.00** | **190,244,244.10** | **101,285,485.90** |

# 10. முன்பணக் கணக்கு

**குறித்துரைக்கப்பட்ட வரையயரைக்கு எதிரான முன்பணக் கணக்கின் உண்மைத் தொகை முன்பணக் கணக்கு செயற்பாடுகள் பின்வருமாறு 31.12.2016**

| | |
|---|---|
| 01. அதிகபட்ச செலவு வரையரை | ரூபா. 18,000,000.00 |
| உண்மைச் செலவு | ரூபா. 17,438,188.10 |
| 02. அதிகபட்ச கடன் வரையரை | ரூபா. 500,000.00 |
| உண்மை வரவு | ரூபா. 11,250,948.71 |
| 03. அதிகபட்ச பற்று வரையரை | ரூபா. 60,000,000.00 |
| உண்மை மிகுதி | ரூபா. 30,099,457.42 |

# 11.விமர்சனம்

அமைச்சானது தனது நோக்கங்களை அடைய மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகிறது என்பதை தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். கௌரவ அமைச்சர் திரு மனோகனேஷன் அவர்கள் வழங்கிய வழிகாட்டல்களும் உதவிகளும் மிகவும் பெறுமதிமிக்கவைகளாகும். இக்காலப்பகுதியில் மிகுந்த ஊக்கத்துடனும் அர்ப்பளிப்புடனும் தங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றிய அமைச்சின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரஞ்ஜத் உயங்கொட

செயலாளர்

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு

" ශ්‍රී ලාංකිකත්වය" අපේ අනන්‍යතාවයයි විවිධත්වය අපේ ශක්තියයි "இலங்கையர்" எமது அடையாளம் பன்மைத்துவம் எமது சக்தி


**40, බුත්ගමුව පාර, රාජගිරිය**

40, புத்கமுவ வீதி, இராஜகிரிய

40, Buthgamuwa Road, Rajagiriya